ISSN: 2012-6352
Reg. No.: 187317

# தொண்டன்

சமய - சமூக - இலக்கிய வெளியீடு

ஆரம்பம் 1969 பெப்ரவரி




மே - 2016

50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

மே - 2016


மலர் - 48 இதழ் - 04

**ஆசிரியர்**

அருட்தந்தை. ரமேஷ் கிறிஸ்றி

**இணை ஆசிரியர்**

மெற்றில்டா இராஜேந்திரம்

**துணை ஆசிரியர்**

பெஸ்லியோ வாஸ்

**கணினி வடிவமைப்பு**

சுபாஜெனி சங்கர்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.

மட்டக்களப்பு மறை மாவட்டம்

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் – 44

மட்டக்களப்பு.

**பதிப்பகம்**

வணசிங்கா அச்சகம்,

திருமலை வீதி,

மட்டக்களப்பு.


## உள்ளே○○○○




| | |
|---|---|
| அன்புடன் உங்களோடு | 01 |
| மக்களின் மாதிரிகை | 02 |
| மாணவர் பக்கம் | 04 |
| குறுங்கதை | 05 |
| இலக்கிய கலாநிதி | 06 |
| சின்ன விசயங்கள் சிறந்த | 07 |
| அம்மா | 07 |
| இசை இறுவட்டு வெளியீடு | 08 |
| வணக்க மாதம் | 09 |
| கத்தோலிக்கத் திருமறை | 10 |
| இதுதான் அரசியல் | 11 |
| புனிதர்களை அறிவோம் | 12 |
| மருத்துவம் | 14 |
| மண்ணின் மைந்தனை | 16 |
| உலகெங்கும் மரியாள் | 17 |
| எண்ணிப்பார்க்கையில் | 17 |
| தகப்பனத்தின்னி | 18 |
| வெள்ளைக்கொடி | 20 |
| தொழிலாளர் தினம் | 22 |
| பெரிய புல்லுமலை ஆலயம் | 24 |
| கடவுளை நம்புவோரை | 26 |
| திருவிவிலியம் கற்போம் | 27 |
| அறிவை வளர்ப்போம் | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: battiscc@gmail.com



விலை : 50/=

ஆண்டுச் சந்தா : 550/=

(தபாற் செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு ...!

அன்பின் இலக்கணமாய்
அகிலத்தின் தாயவளாய்
உலகமதை ஆளும்
இறை இயேசுவின்
தாயவளாய்!
ஆண்டவரின் குரலுக்கு
அடிமையானவளாய்
பரிசுத்த ஆவியில்
நிரம்பப்பெற்று
கனி கொடுத்த
அன்னையவளாய்
எம் அனைவரின் தாயாக
உரு கொடுக்கும் அன்னை
மரியே! உன் புகழை
எவ்வாறு உரைப்பேன்!
ஜெபமாலை சொல்லும்
வீடுகளில் ஒளிகொடுக்கும்
உன் கருணைக்கு புகழ்
ஏது சொல்வேன் தாயே!
உன்னைக் கரமேந்தி ஜெபித்து
உன் ஆசீர் பெற்றிடுவேன்
என் தாயே! அன்னை மரியே!

அன்புமிக்க சகோதரங்களே!

வைகாசி மாதம் பிறந்திடிச்சு, அன்னை மரியின் ஆசீர் வீடுகளில் தங்கிடிச்சு. அன்னைக்கு மரியாதை செலுத்த வீடுகளிலும், ஆலயங்களிலும் அன்னையவளின் புகழுரைக்க ஜெபமாலை சொல்லும் நாவறிக்கை எங்கும் கேட்கின்றது. மாதம் தொடங்கி முடியும் வரை அனைவரது வீடும் அன்னையின் அலங்காரத் தோரணைகளோடு ஜெபமாலை சொல்லி அன்னையின் அன்பைச் சுவைத்துக் கொண்டிருக்கும் மாதமாக இம்மாதம் விளங்குகிறது.

இம் மாதத்திலே உங்கள் வீடுகளில் நீங்கள் அன்னையை நோக்கி இருகரம் ஏந்தும் போது உங்களை நிறைவான ஆசீரில் நிரப்ப, ஆண்டவரின் ஆசி உங்களை நிரப்ப பரிந்து பேசும் தாயாக உங்கள் அன்னை என் அன்புத் தாய் காத்திருக்கிறாள். அன்னையவள் உங்கள் வாழ்வின் குறைகளை நிறைவாக்குவார்.

திருமண வீடு நிறைந்த சந்தோசமாயிருந்தது. அதிலும் சிறு குறை. என்ன குறை? சுவையுள்ள திராட்சை ரசம் தீர்ந்துவிட்டது. உடனே கலக்கம். எங்கே ஓடுகின்றது? இயேசுவை நோக்கியா? இல்லை, எம் அன்னை மரியை நோக்கி! எம் அன்னையிடத்தில் குறையைச் சொல்ல மகனிடத்தில் பரிந்து பேசுகிறாள். உடனே கற்சாடி தண்ணீர்ச் சாடியாய் நிறைகிறது. இயேசுவின் கரம் மரியாளின் வார்த்தையால் தண்ணீர்ச் சாடியில் தொட்டுச் செபிக்கும் போது வற்றாத சுவையான திராட்சை இரசமாக மாறுகிறது. அதேபோல் நம் வாழ்வு சந்தோசங்கள் பலவற்றால் நிறைந்தி ருக்கும். ஏதோ ஒரு குறைகளோடு வாழ்வோம். அந்த ஒரு குறையை அன்னையிடத்தில் முறையிட்டு நம் வாழ்வை நிறைவான ஆசீராக மாற்றிடுவோம்.

அன்னையவள் விண்ணக மண்ணக அரசி! அவர் நம் உலகின் தாய்! நம் ஒவ்வொருவரின் விடிவெள்ளி நட்சத் திரம்! குறைகளை நிறைவாக்கும் பெட்டகம்! அன்னைய வள் இன்று தன் பெயரை மாற்றி நம் ஒவ்வொருவரின் இதயங்களிலும் செபமாலை மாதா, சதாசகாய மாதா, காணிக்கை மாதா, லூர்த்து மாதா, இலங்கை மாதா, ஆரோக்கிய மாதா, ஆரோபண மாதா என்று பல்வேறு நாமங்களில் குடிகொண்டிருக்கிறார். எம் அன்னையவள் இயேசுவின் தாயாக உலக மக்களின் தாய்மாரின் ஏக்கங்கள், கஸ்ரங்களை கடந்து உலகத்தில் நடை பயின்றவள், தன் மகனை சிலுவை மரத்தில் பலிகொடுக்கும்போது தானும் அழுது உலகை ஜெயிக்கத் தன் மகனை ஈந்த இரக்கத் தின் தாய்.


அந்த அன்னையிடத்தில் எம் குறைகளை நிறைவாக்க இயேசுவின் தாயிடத்தில் நம்மை ஒப்புக் கொடுத்து, நம்மை இயேசுவின் அன்பிலும், அன்னை மரியின் அன்பிலும் -ஆசீர்வாதத்திலும் வாழ ஒப்புக் கொடுப்போம்.

ஆசிரியர்

இறைவாக்கு
"அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" (யோவான் 2:5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களின் மாதிரிகை மரியாள்

- அருட்சகோதரி ஹூட்ஸ் F.M.M -

**வை**காசி வந்துவிட்டால் திருச்சபை அன்னை எமக்கு எடுத்துரைக்கும் அரிய அறிவுரை அன்னை மரியாளைப் பற்றிப் பிடித்து அவளின் அடிச்சுவற்றைப் பின்பற்றுவோமானால் அவள், எம்மை எழிலாக விண்ணக வாழ்வில் இன்பமுடன் இறைவனோடிருக்க வழிகாட்டுவாள் என்பதே. அன்னை மரியாள் விசுவாசத்தின் வித்து, வீரமங்கை, இறை சித்தத்தை இல்வாழ்வில் இனிதே இறுதிவரை நிறைவேற்றியவள், இன்பம், இன்னல் இரண்டையும் அன்புடன் ஏற்று வாழ்ந்து காட்டிய வைரக்கல், விடியலின் வீரப் பெண், பொறுமையின் பொற்சிலை. வளவளவென நம் மங்கையர் பலர் பேசி நேரத்தைச் செலவிடுவதுபோல் மரியாள் நடந்துகொள்ளவில்லை. கேட்டதற்கு உரிய பதில் கொடுத்தாள். அளவோடு பேசினாள். இதை நாம் நற்செய்தி மூலம் நன்கு அறிய முடிகிறது. தூய லூக்கா நற்செய்தி 1ம் அதிகாரம் 37ம் திருவசனத்திலே பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது. கபிரியேல் தூதன் மரியாளை அணுகி, அன்னை மரியாளே இயேசுவின் தாயாக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நல்ல செய்தியை அறிவித்தபோது மரியாள் ஓர் கணம் சிந்தனைச் சிற்பியானாள். மறுகணம் நீடிய பதில் உரைக்காமல் "நான் அண்டவரின் அடிமை, உம் சொற்படியே ஆகட்டும்" என இரத்தினச் சுருக்கமாகப் பதில் கொடுத்தாள்.

மரியாளைப் போல் எமது அன்றாட வாழ்விலே தேவதூதர் பல செய்திகளைத் தருகிறார். காலையிலே பக்கத்து வீட்டுப் பரிமளா, தான் வைத்தியசாலைக்குப் போகவேண்டும். தான் திரும்பி வருமளவும் தன் தாய் நோயினால் படுத்த படுக்கையில் இருக்கிறாள். அவளைப் போய்ப் பார்க்கும்படி கேட்கிறாள். கதவைத் திறந்ததும் பிச்சைக்காரர் ஒருவர் "அம்மா பசிக்குது சாப்பிட ஏதாவது தருவீங்களா?" எனக் கேட்க, அவருக்கு உணவு கொடுக்க உள்ளே போய் வந்தால், இன்னொரு ஏழை "அம்மா உங்கள் தோட்டத்தில் ஏதாவது வேலை செய்வேன், சம்பளம் தருவீர்களா?" இப்படித்தான் நாம் இறைசெய்தியைக் கேட்கிறோம். நம் பதில் என்ன? சிந்தியுங்கள்...

அன்னை மரியாள் மங்கையரின் மாதிரிகை, தியாகத் திருவிளக்கு. தன் உறவினள் எலிசபெத்துக்கு உதவிக்கரம் நீட்ட ஓடோடிச் செல்கிறாள். அங்கே சென்றதும் மரியாள் இறைபுகழ் பாடினாள் (லூக் 1: 47-55). எலிசபெத் அப்பாடலைக் கேட்டு இரசித்தாள். மரி அன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவோடு பேசுவாள், அவளது வார்த்தைகள் அன்பு வார்த்தைகள், அடுத்தவருக்கு ஆறுதல் தரும் வார்த்தைகள். ஆழ்ந்த சிந்தனையின் பின்பு எழும் அறிவுள்ள வார்த்தைகள். நாமும் அன்னையின் மாதிரிகையைப் பின்பற்றி அறிவுள்ள பெண்களாக மாறுவோம். இயேசுவை யூதச் சட்டப்படி ஆலயத்தில் அர்ப்பணிக்கச் சென்றபோது சிமியோன் என்னும் குரு மரியாளின் உள்ளத்தை ஊடுருவிச் செல்லக்கூடிய வார்த்தைகளை அள்ளி வீசினார். (லூக் 2:33-35). மரியாளோ தன் உள்ளத்தில் வார்த்தைகளை வைத்துச் சிந்தித்தாள். நாமும் மரியாள், சூசை போல் சட்டத்திற்கு இசைந்து நடப்போம். குடும்பத்தில் குழந்தைகளை வளர்க்கும் வகையின் மாதிரிகையாக விளங்குகிறார்கள் மரியாளும் சூசையும். இயேசு சாதாரண யூதப் பையனாக வாழ்ந்தார். ஆனால், மரியாளோ தன் மகனைப் பக்குவமாகப் பாதுகாத்து நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுத்தாள். இயேசு எப்பொழுதும் அன்னையின் சொற்கேட்டுத் தன் தாய் சொல்லைத் தட்டாது கீழ்ப்படிந்து வாழ்ந்தார். (யோவான் 2:1-22). கானாவூர் திருமணத்திலே தன் தாயின் தயவான வேண்டுகோளிற்கிணங்கி இயேசு தண்ணீரை இரசமாக்கினார் (லூக் 2:41-51). இயேசு தன் பெற்றோருடன் எருசலேம் ஆலயத்தில் பாஸ்கா விழா முடிவுற்றதும் ஆலயத்தில் தங்கி போதகர்களோடு உரையாடிக்கொண்டிருந்தார். அங்கும் மரியாள் சென்று கேட்ட வினாவிற்கு விடை கூறிவிட்டுத் தன் தாய் சொல் தட்டாது தன் பெற்றோருடன் இல்லம் சென்றார். மரியாள் இறுதியாகத் தன் மகனின் பாடுகளைப் பார்த்துப் பரிதவித்தாள். குற்றமற்ற தன் மகனின் தோளில் பாரச் சிலுவையைப் போட்டு அடித்துத் துன்புறுத்துவதையும், தலையில் முள்முடி அணிந்து, குருதி வழிந்தோடுவதையும் பார்த்துப் பதைபதைத்தாள் அன்னைமரி. பின்னர் கல்வாரியில் இயேசுவின் குருதியோடு ஒட்டியிருந்த ஆடைகளைக் கழற்றியபோதும் சிலுவையில் ஆணியால் அடித்தபோதும் அன்னை பட்ட வேதனையோ அளவிடற்கரியது. ஆனால், பொறுமையைக் கடைபிடித்தாள். இறுதியாக இயேசு, "இதோ உன் தாய்" என்று கூறிய போதும், "இதோ உன் மகன்" எனக் கூறியபோதும் தன் தாயுள்ளத்தை மகன் புரிந்து கொண்டார் என்றே சொல்ல வேண்டும். இறுதியாக நாம் கூறுவது, நமது பிரிவினைச் சகோதரர் எம்மேல் என்றும் பாசமும், எமக்கெல்லாம் மாதிரிகையுமாயிருக்கிற அன்னை மரியாளை அவமானப்படுத்தி, அவசங்கைப்படுத்தி, தீய வார்த்தைகளால் உதாசீனப் படுத்துவோரைப் பார்த்து மரியாள் கண்ணீர் சிந்துகிறாள். நாம் இவர்களை மனமாற்றுவோமா எம் செபத்தால்! என்றும் நாம் மரியாளின் வழிநடப்போம். ஆசீர் பெறுவோம்!



**மிதக்கும் மின் நிலையம்!**

லண்டனில் தேம்ஸ் நதியின்மீது 23 ஆயிரம் சூரிய மின் தகடுகளுடன் ஒரு 'மிதக்கும் சூரிய மின் நிலையம்' அமைக்கப்படுகிறது. ஐரோப்பாவின் மிகப்பெரிய மிதக்கும் மின் நிலையம் இது. தினமும் 58 லட்சம் கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறனுள்ளது இது.


"திட்டமிட்டு ஊக்கத்துடன் உழைப்பவரிடம் செல்வம் சேரும் என்பது திண்ணம்; பதற்றத்துடன் வேலை செய்பவர் பற்றாக்குறையில் இருப்பார்.

ஒருவர் பொய் பேசிச் சேர்க்கும் பொருள், காற்றாய்ப் பறந்துவிடும்; அவரது உயிரையும் அது வாங்கிவிடும்"

**[நீதிமொழிகள் 21:5-6]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## திருச்சபையின் விசேட பண்புகள்

இறைமகன் இயேசுவின் மேல் விசுவாசம் கொண்டு, அவர் ஏற்படுத்திய திருச்சபையின் கீழ் வாழ்ந்து, திருமுழுக்குப் பெற்ற ஒரு சமூகமாய், ஒன்று கூடி வாழ்ந்த அங்கத்தவர்கள் அனைவரும் திருச்சபையின் மக்களாகக் கருதப்பட்டனர். இத்தகைய திருச்சபை மக்கள் அனைவரும் யூதர்களாய் இருந்ததாலும், தங்களுடைய யூத மத அனுட்டானங்களை, சட்டம், சடங்கு, சம்பிரதாயங்களைத் தொடர்ந்தும் கடைப்பிடித்து வாழ்ந்தமையால் திருச்சபை யூதச் சமூகத்தின் ஒரு சிறு சமூகமென்றும், கிறிஸ்தவம் யூதச் சமூகத்தின் ஒரு சிறு கிளையெனவும் கருதப்பட்டு வந்தது. இது இவ்வாறிருக்க இவர்களை ஏனைய யூத மக்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டிய சில விசேட பண்புகளும் இருந்தன. அவையாவன திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் இருந்த மையாகும்.

ஆதித் திருச்சபையின் மத வாழ்வில் நான்கு முக்கிய சிறப்புப் பண்புகளை நாம் காண்கிறோம். இத்தகையவர்கள் பேதுருவின் உரை வழியாகத் தாம் பெற்றுக் கொண்ட முதல் விசுவாசத்தைத் தொடர்ந்து, திருத்தூதர்களின் போதனைகளைக் கேட்பதன் மூலம் விசுவாசத்தில் வளர்த்து உறுதியடைந்தனர். இறைவனையும், மறை உண்மைகளையும், வேத நூல்களையும் கற்றறிவதில் ஆர்வம் காட்டலாயினர்.

இவர்கள் அனைவரும் திருத்தூதர்களின் வழிநடாத்துதலின் கீழ் பொது வாழ்வில் பங்கெடுத்து, அனைவருடனும் அன்னியோன்னியமாய்ப் பழகி, நட்புடன் உறவாடிப் பொறுப்புணர்வுடன் நடந்துகொண்டனர். உண்மைக் கிறிஸ்தவனுக்கு அடையாளமாகக் கிறிஸ்து காட்டிய அன்பிலும், ஒற்றுமையிலும் ஒன்றித்து வாழ்ந்தனர். தமது உடைமைகளையும் விற்று அனைவருக்கும், உரிய முறையில் பகிர்ந்தளித்தனர். "அப்பம் பிடுதல்" நற்கருணையினைக் குறிக்கும் ஒரு சொற்றொடராகும். ஆதிக்கிறிஸ்தவர்கள் ஆலயங்களுக்கும், செபக்கூடங்களுக்கும் சென்று அங்கு நடைபெறும் வழிபாடுகளில் பங்கெடுத்தாலும் ஒவ்வொரு நாளும் வீடுகளில் கூடிக் கிறிஸ்தவர்களுக்கே உரித்தான நற்கருணை வழிபாட்டில் எளிய உள்ளத்தோடும், பேருவகையோடும் பங்குபற்றலாயினர்.

இதனால், இவர்கள் இறைவன் தங்களோடு வாழ்கிறார் தங்கள் மத்தியில் பிரசன்னமாயிருக்கிறார் எனும் தேவ பயத்தோடும், பயபக்தியுடனும் வாழ்ந்துவந்தனர். உயிர்த்த கிறிஸ்துவிற்குச் சான்று பகரும் சமூகமாய் வாழ்ந்து வந்தனர். இதனால் இவர்கள் மத்தியில் திருத்தூதர்கள் மூலம் பல புதுமைகளும், அரும் அடையாளங்களும் இடம் பெற்றன. உடைமைகள், நிலபுலன்கள் உடையோர் அவற்றை பொதுப் பொருளாய்க் கருதினர். வேறுபாடுகள், வேற்றுமைகள் இன்றி ஒற்றுமையாய் வாழ்ந்தனர். இவர்களின் சமூக வாழ்க்கை கும்ரான் சமூகத்தின் வாழ்க்கையை ஒத்ததாய் இருந்தது. இவர்களின் வாழ்க்கை முறையும் ஏனையோரைக் கவரக் கூடிய தாய் இருந்தது. இதனால் ஏனைய மக்கள் மத்தியில் நன் மதிப்பைப் பெற்று வாழ்ந்தனர்.

இவ்வாறு இவர்கள் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டவர்களாய், தங்களுக்குள் புது உறவு ஏற்பட்டுள்ளதை உணர்ந்தவர்களாய் ஒரே உள்ளமும், ஒரே உயிரும் கொண்டவராய்த் திகழ்ந்தனர். இவர்களுள் எபிரேய மொழி பேசும் யூதர்களும், கிரேக்க மொழி பேசும் யூதர்களும் இருந்தாலும் திருமுழுக்கின்மூலம் தூய ஆவி இவர்கள் அனைவரையும் ஒன்றாகப் பிணைத்திருந்தார். இவர்கள் அனைவருமே இவ்வுலகப் பற்றற்றவராய் இருந்தனர். தம் உடைமைகளைத் தமக்குரியதாய்க் கருதாமல் பொது உடைமையாகக் கருதி வாழ்ந்தனர்.

- தொடர் 13ம் பக். ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரிலிருந்து புறப்பட்ட பேருந்து மணிக்கூட்டுக் கோபுரத்தைக் கடந்து, கோட்டைமுனைப் பாலத்தையும் பின் நகர்த்தி, பொலிஸ் ஸ்ரேசனைத் தாண்டி, கல்லடிப் பாலத்தண்டை இருக்கிற 'செக்கிங் பொயின்'றில் வந்து நின்றது.

கீழே இறங்குமாறு உத்தரவு பிறக்க முன்னரே, பழக்கப்பட்டவர்கள் சிலர் இறங்கிக் கொண்டனர்.

அதுவே போதுமென்று கண்டோ என்னவோ, ஆண் பாதி — பெண் பாதியாக சீருடையினர் நால்வர் முன்னாலேறி, பின்புறம் நோக்கி அடையாள அட்டைகளைப் பரிசீலித்த வாறு நகர்ந்தபோது, ஒருவன் ஜன்னலோரம் இருந்த அழகியைச் சீண்டினான்.




"ஹொஹேத யன்னே....?"

வழமையாகச் சீருடையினர் கொச்சைத் தமிழில் விசாரிப்பதுதான் வழக்கம்.

சிங்களத்தில் விசாரித்த இவனோ, அந்த இரு சொற்களைக்கூடச் சரியாக உச்சரிக்க முடியாமல் அவஸ்தைப்பட்டதை இவள் அவதானித்தாள்.

ஒன்றில் திக்குவாயனாக இருக்க வேண்டும்... அல்லது மொழிப் பரிச்சயமின்றி உச்சரிக்கும் தமிழனாகவோ முஸ்லீமாகவோ இருக்கவேண்டும்.

தன்னை விசாரித்தவனுக்கு இவள் சிங்களத்திலேயே பதில் சொன்னாள்.

"மள கெதற யனவா" (මළ ගෙදර යනවා / செத்த வீட்டுக்குப் போகிறேன்).

அவன் அதற்குமேல் எதுவும் கேட்க வில்லை.

பரிதாபமாக ஒரு புன்னகையை வலிந்து வரவழைத்துக்கொண்டு அகன்று போனான்.

பின் வாயிலால் இறங்கிப் போகும்போது சகாவிடம் கேட்டான் —

"அப்பிடி என்றால் என்ன?"

அவளது யூகம் சரியாகவே இருந்தது.

"அது சா வீடு"

அவன் சகா அவனுக்குத் தமிழில் சரளமாகவே சொன்னான்.

ஊரில் நடக்கின்ற மரண வீடுகளுக்குப் போய் என்ன ஏதென்று விசாரித்ததில் அவனுக்கு அது புரிந்திருக்கவேண்டும்.

- 17ம் பக். ...

— வீக்கேயெம் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய கலாநிதி வ.அ. இராசரெத்தினம்

## அவர்களின் நினைவுப் பேருரை நிகழ்வு



நாடறிந்த எழுத்தாளர் அமரர் வ.அ. இராசரெத்தினம் அவர்கள் மறைந்து 15 ஆண்டுகள் கடந்து விட்டபோதும் இன்றும் அவர் தமிழ் இலக்கியப் பரப்பில் மின்னும் தாரகை போலவே ஒளி வீசுகிறார். அவர் விட்டுச் சென்ற இடம் இன்னும் நிரப்பப்படாமலே இருக்கிறது. கிழக்கு மாகாணத்தின் மூதூரில் பிறந்த இவரின் நினைவாக கடந்த மாதம் நினைவேந்தல் நிகழ்வும், நினைவுப் பேருரையும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தின் அனுசரணையுடன் மூதூர் புனித அந்தோனியார் மகாவித்தியாலய 'லில்லி' மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு ஓய்வு நிலை அதிபர் ஜனாப் மூதூர் முகைதீன் அவர்கள் தலைமை வகித்தார். மூதூர் புனித அந்தோனியார் மகா வித்தியாலய மாணவர்களின் தமிழ்மொழி வாழ்த்தினைத் தொடர்ந்து, வரவேற்புரையினை ஓய்வுநிலை அதிபர் ஏ. எஸ். உபைதுல்லா அவர்கள் வழங்கினார். திருமலை மறைமாநில ஆயர் பேருட் கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையின் ஆசியுரையுடன் ஆரம்பமான நிகழ்வில், திருமலை நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ க. துரைரெட்ணசிங்கம் அவர்கள் முதன்மை விருந்தினராகவும், டாக்டர் வ. இருதயநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் பங்குகொண்டு சிறப்பித்தனர். பெரும் எண்ணிக்கையான தமிழ், முஸ்லிம் இலக்கிய ஆர்வலர்களும், பொது மக்களும் பங்கு கொண்ட இந நிகழ்வின் ஆரம்பத்தில் அமரர் வ.அ. இராசரெத்தினம் அவர்களின் உருவப்படம் ஆயரால் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டு மாலை அணிவித்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. அமரரின் வாழ்வும், எழுத்தும், அவை ஏற்படுத்திய தாக்கம் குறித்தும் கவிஞர் அ.ச. பாய்வா அவர்கள் கவியாரம் படைத்தார்.

"ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் வ.அ. இராசரெத்தினத்தின் தடங்கள்" என்னும் தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் செ. யோகராஜா அவர்கள் நினைவுப் பேருரையினை நிகழ்த்தினார்.

இந்நினைவேந்தல் நிகழ்வில் 2015ம் ஆண்டு ஆகஸ்ட் க.பொ.த. உயர் தரம் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்லவுள்ள தமிழ், முஸ்லிம் மாணவர்கள் இருவருக்கு அமரர் இராசரெத்தினம் நினைவுப் பரிசில்களும் வழங்கிவைக்கப் பட்டன.

இறுதியாக அமரர் வ.அ.வின் புதல்வருள் ஒருவரும், கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளருமான அருட்திரு. ஏ.ஏ. நவரெட்ணம் அடிகளாரின் நன்றியுரையும் இடம் பெற்றது.

- செய்தித் தொகுப்பு : ஆ.கி. பிரான்சிஸ் -

அருளாளர் அன்னை தெரேசா புரட்டாதித் திங்கள் நான்காம் நாளன்று (04.09.2016) புனிதையாக உயர்த்தப்படவுள்ளார் எனும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அன்னை தெரேசாவைப் புனிதையாக உயர்த்தும் இந்நிகழ்வு ஆசியாவில் பணி புரியும் பலருக்குமறைபரப்புப் பணியாற்றும் உந்து சக்தியாக அமையுமென்று இராஞ்சி பேராயர் கர்தினால் டெலிஸ்போர் டோப்போ கூறியுள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சின்ன விஷயங்கள் சிறந்த வாழ்க்கை

**எல்லாவற்றையும் நேசியுங்கள் :**
தன் கணவனைத் திடீர் மாரடைப்பில் பலி கொடுத்த ஆசிரியை, வாழ்வின் நுட்பத்தை அந்த இழப்பில் உணர்ந்தார். ஒரு வாரத்திற்குப் பிறகு வகுப்பில் மாணவர்களிடம் சொன்னார், "வாழ்க்கை என்பதே நேசிப்பதற்கும், உணர்வதற்கும், பகிர்வதற்கும் தரப்பட்டுள்ள வாய்ப்பு. இது எத்தனை காலம் நீடிக்குமோ தெரியாது. ஒவ்வொரு நாளும் வாழ்வின் சில அழகான அம்சங்களை உணருங்கள். காற்றில் தவழும் நறுமணம், கண்களில் தென்படும் பூக்கள், எங்கோ கேட்கும் இசை, கடந்து போகும் குழந்தை, எல்லாவற்றையும் நேசியுங்கள்" என்றார். அதன் பிறகு வாழ்க்கை அனுபவமே புதிதாக இருப்பதை உணர்ந்த அவரின் மாணவர்கள் உயிர்ப்பும், அன்பும் நிறைந்த மனிதர்களாய் மலர்ந்தார்கள். வாழ்வென்னும் பாடத்தைப் புரியவைத்த அந்த ஆசிரியையை நாளெல்லாம் நினைவில் கொண்டார்கள்.

- ஜே.எச்.இரத்தினராஜா -

**என்ன புடலங்காய்....**
ஏதாவது சொன்னால், "என்ன பெரிய புடலங்காய்" என்பது வழக்கம். இதற்கொரு காரணமுண்டு. சிலருக்குச் சின்ன வயதில் புடலங்காய் பிடிக்காது. வளர்ந்த பிறகும் அதே வெறுப்பு நீடிக்கும். நெருக்கமாக யாராவது "சாப்பிட்டுப் பாருங்களேன்" என்று வற்புறுத்தியதும் சுவைத்துப் பார்த்தால் பிடித்துப் போகும்.

விழுங்கச் சிரமம் என்று நினைத்த புடலங்காய் விருப்பமானதாய் மாறும். இதுபோலத்தான் வாழ்வில் சில விஷயங்களை நம்மால் ஆகாது என்று நினைத்துவிட்டிருப்போம். ஆனால், பின்னால் முயன்று பார்த்தால் அவை நமக்கேற்றதாகவும், நல்லவையாகவும் தெரியும். "என்ன பெரிய புடலங்காய்" என்று எதையும் தள்ளாதீர்கள். முயன்று பாருங்கள்.

பத்துமாதம் சுமந்து
பாலகன் இயேசுவை
பாலூட்டி வளர்த்தாயே
பாரினில் பாசம் பொங்கிட
பரிவுதனை காட்டினாயே!

பாலகன் இயேசுபிரானை - எமக்குப்
பாடமாகக் கற்றுத் தந்தாயே
பாடுகள் பட்ட இயேசுவைப்போல்
பாடுகளும் பட்டாயே!

இல்லற வாழ்வை இனிதாய் ஏற்று
இறைவனைப் புகழ்ந்தாயே
இன்புறப் பழகி இனசனத்தோடு
இன்பம் கொண்டாயே!

காசு பணத்தை சிறிதும் பாராது
கண்ணியமுடன் வாழ்ந்தாயே
காலமெலாம் புகழும்படி
கர்த்தர் இயேசுவை மனதிற்கொண்டாயே!

தேவ அன்னையின் வாழ்வுபோல் ஆக
தேவ சித்தத்தை ஏற்றாயே
தேடும் மக்களாய் உமதன்பை
தேடித் தேடி அலைகிறோமே!

இறைவனை நாடுகிறோம்
இறையருளை இறைஞ்சுகிறோம்
வாழ்வும் வழியுமான இறை பதத்தில்
ஓர்நாள் வாழ வேண்டுகிறோம்.

- அ. சகாயம் - பிரான்ஸ் -

# அம்மா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மட்டக்களப்பு இருதயபுரத்தைச் சேர்ந்த ஜூட் திலீபன் பிரான்சிஸ் அவர்கள் எழுதி இசையமைத்த தவக்கால சிந்தனையை யொட்டிய "சிலுவையின் பாதையில்" இசை இறுவட்டு வெளியீடு கடந்த *10.03.2016* வியாழக்கிழமை அன்று மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் அருட்திரு: A.A.நவரெட்ணம் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மட்டக்களப்பு மறைமாநில ஆயர் பேரருட்திரு: கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்கள் முதன்மை விருந்தினராகவும், மட். மறை மாநிலக் குருமுதல்வர் மரியன்னை பேராலயப் பங்குத்தந்தை அருட்தந்தை: A. தேவதாசன் அடிகள், இயேசுசபையைச் சேர்ந்த அருட்தந்தை: J. ஜோசப்மேரி அடிகள், கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபர் அருட்சகோதரர்: ஸ்டீபன் மத்தியு SSJ ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், "மாநகராம் மட்டு மாநகராம்" பாடல் புகழ் பாடகர் திரு: S. ஞானப்பிரகாசம் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.



விழாவின் ஆரம்பத்தில் அருட்தந்தை: C.V. அன்னதாஸ் அவர்கள் இறைவணக்கம் நிகழ்த்த, இறுவட்டு தொடர்பான மதிப்பீட்டு உரையினை அருட்தந்தை X.I. ரஜீவன் அடிகளார் நிகழ்த்தினார். இறுவட்டின் முதற் பிரதியினை ஆயரிடமிருந்து அருட்தந்தை: M. ஸ்டனிஸ்லோஸ் அடிகளார் பெற்றுக்கொண்டார்.

அனேகமான அருட்தந்தையர்களும், பொது மக்களும் கலந்துகொண்ட நிகழ்வின் வரவேற்புரையினை திரு. A.C. பிரான்சிஸ் அவர்களும், நன்றியுரையினை கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர்: திருமதி. றூபி வலன்ரீனா பிரான்சிஸ் அவர்களும் நிகழ்த்தினர்.

புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவரான ஜூட் திலிபன் தனது 4 வயதிலிருந்தே ஓகன் வாத்தியத்தை இசைப்பதிலும், 11 வயதிலிருந்து பாடல் எழுதுவதிலும், கவிதை எழுதுவதிலும் திறமை வாய்ந்தவர் என்பதுடன் இதுவரை பல்வேறு தேசிய நாளிதழ்களில், 'தொண்டன்', 'வெட்டாப்பு' போன்ற சஞ்சிகை, பத்திரிகைகளுக்கு பல்வேறு ஆக்கங்களையும் எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது அன்னை திருமதி றூபி வலன்ரீனா அவர்கள் மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையத்தின் கிறிஸ்தவ கலை இலக்கியப் பேரவையின் அங்கத்தவர் என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

■ **A.C. பிரான்சிஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணக்க மாதம்

'மே' மாதம் என்றதும் மனதில் உதிப்பது, "வணக்க மாதம்" நம் அன்னை மரியாளின் மாதம். ஐரோப்பிய நாடுகளில் வசந்த காலத்தின் நடுப்பகுதியே இந்த மாதம். பிரபஞ்சம் கவர்ச்சியான அழகிய தோற்றத்தால் பூமித் தாயை அலங்கரிக்கும் காலம். அழகிய மலர்கள் பூத்துக் குலுங்கி, நறுமணம் வீச, அதிற் சொட்டும் தேனைக் குடிக்க, வண்டுகள் ரீங்காரம் செய்ய, பல வர்ணச் சிறகடித்து பறந்து வரும் பறவையினம் இன்னிசை பாட, தன் பச்சைப் போர்வையை நீக்கி, ஒளியை வரவேற்கிறாள் பூமித்தாய்.


வசந்த கால அழகினுள் நம் அன்னை மரியாளின் பேரழகைக் கண்ட ஓர் இயேசு சபைத் துறவி சிந்தித்தார். அன்னையைப் பக்தி செய்யும் பக்தர்கள் தினமும் செபமாலை செபிக்கின்றனர். வாரத்தில் ஒருநாள் சனிக்கிழமை, மாதத்தில் ஒரு நாள், ஏதோ ஒரு திருநாள் கொண்டாடி மகிழ்கின்றனர். இயற்கை வளங்களை அள்ளித்தரும் இந்த வசந்தத்திலும் அதிகமான அழகு சௌந்தரி நம் அன்னை. அதுமட்டுமல்ல, புண்ணிய பூக்களால் மணம் பரப்பி, இனிய கனிகளாகிய பல்வேறுபட்ட நம் நற்கனிகளை வாரி வழங்கி, தன் மக்களை இறை வழியில் நடத்திவரும் நம் அன்னைக்கு இம்மாதத்தை அர்ப்பணித்தால் என்ன? எண்ணம் அவர் மனதில் உதித்தது. தன் சிற்றாலயத்தில் இப் பக்தி முயற்சியை ஆரம்பித்தார். காலப்போக்கில் சுற்றாடலில் பரவியது. அன்னையின் வணக்கத்தால் பல அரும் அடையாளங்களைக் கண்ட மக்களால் வேறு நாடுகளுக்கும் பரவியது. உரோமாபுரியில் தொடங்கிய வணக்க மாதம், இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியது.

வணக்க மாதப் பக்தி முயற்சியால் அன்னை மரி மகிமைப்படுத்தப்படுவதைக் கண்ட பாப்பரசர் 7ம் பத்திநாதர் வணக்கமாதப் பக்தி முயற்சியை அங்கீகரித்தார். நாமும் வைகாசி மாத வணக்கமாதம் மூலம் அன்னையைப் போற்றி அவரது பக்தியை வளர்ப்போம்.



E. பிரபு

காரைதீவு பங்குத் தந்தையும், கல்முனை பாத்திமாக் கல்லூரி அதிபருமான அருட்தந்தை பிறைனர் செலர் அவர்கள் 2015ம் ஆண்டிற்கான 'சாம' மற்றும் "திலின பூஜா ஆணைக்குழுவில் சிறப்புத் தேர்ச்சிப் பெற்றவர்" (கல்விச் சேவையில்) என்ற விருதினையும் பெற்றார். இந்நிகழ்வு 2016 தை மாதம் 30ம் திகதியன்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது. தந்தையவர்களுக்கு தொண்டன் குழு தமது வாழ்த்தைத் தெரிவிக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்கத் திருமறை

க.பொ.த. சா/ தர மாணவர்களுக்கானது

தரம் - 11

பாடங்கள் 9-10 பகுதி - 01

• போதகர் S. அருமைராஜா (Dip.in.Chr (India)

53. கத்தோலிக்க திருமண வாழ்வில் உட்பட்ட ஒருவர் விவாகரத்து பற்றிச் சிந்திக்கும்போது அவருக்குச் சவாலாக அமையும் இறை படிப்பினை:

கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்.

54. திருமண அன்பு எதனூடாக நிலை பெற்றுள்ளது?

ஒருவருக்கு ஒருவர் அளிக்கும் வாக்குறுதியில்

55. குடும்ப வாழ்வில் நுழையும் தம்பதியினருக்குத் தேவையான உதவிகளையும், அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்குவது:

கத்தோலிக்கத் திருச்சபை.

56. பிள்ளைகளின் முதல் ஆசிரியர்?

பெற்றோர்.

57. வாக்குறுதியை உள்ளடக்கிய முதலாவது கட்டளை யாது?

உன் தந்தையையும் தாயையும் மதித்து நட.

58. பவுலடியார் கிறிஸ்தவ குடும்பத்திலுள்ள அன்புறவை எதற்கு ஒப்பிடுகிறார்?

கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் உள்ள உறவு என.

59. தந்தையையும் தாயையும் மதிக்கிறவர்களுக்கு இறைவனால் கிடைக்கும் ஆசீர் யாது?

நாடும், நீண்ட ஆயுளும்.

60. குடும்பச் சூழலில் வாழும் பிள்ளைகள் எதன்மூலம் வழிநடத்தப்படுகின்றன?

பாடசாலை, பங்கு, தேவாலயம், கிராமம், நகரம், பொதுச் சமுதாயம்.

61. கிறிஸ்தவ குடும்பத்தின் பூரணத்துவம் நிலைத்திருப்பது:

இறையரசின் மட்டில் மனித உள்ளங்களைச் செலுத்துவதில்.

62. இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் இணைப்பாளராக இருப்பவர்கள் யார்?

குருக்கள்.

63. மெல்கிசெதேக்குக்கு அப்பமும், திராட்சை இரசமும் கொண்டுவந்தவர் யார்?

சாலேம் அரசர்.

64. பழைய ஏற்பாட்டில் ஆலயத்தில் தூய்மையைக் காக்கவேண்டியவர்கள் யார்?

குருக்கள்.

65. மெல்கிசெதேக் முறைப்படி என்றென்றும் தலைமைக்குரு யார்?

இயேசு கிறிஸ்து.

66. கிறிஸ்து எதற்காக குருவும், பலிப்பொருளுமானார்?

இழந்துபோன இறை மனித உறவைப் பெற்றுத்தர.

67. கிறிஸ்து தமது குருத்துவப் பணியை யாருக்கு அளித்துள்ளார்?

அப்போஸ்தலர்களுக்கும், வழிவந்தோரான குருக்களுக்கும்.

68. கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்குபெறுகின்றவர்கள் யாவர்?

திருமுழுக்கு வழியாகக் கிறிஸ்துவோடு ஒன்றுபட்ட யாவரும்.

69. திருச்சபையின் இருநிலை குருத்துவப் பணி எவை?

- பொதுக்குருத்துவம்
- பணிக்குருத்துவம்

70. புதிய ஏற்பாட்டில் பணிக்குருத்துவம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டதென்பதை உறுதிப்படுத்தும் சம்பவம்?

யூதாசுக்குப் பதிலாக மத்தியா தேர்ந்துகொள்ளப்பட்டமை

- தொடரும் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாழூர்வேந்தன்

## நாளொரு மேனி பொழுதொரு வண்ணம்

நம் நாட்டு அரசியல் நிலவரம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது. பேய்க்காட்டும் சிங்கள அரசியல், மேற்கத்திய நாடுகளுக்கு காதில் பூச்சுற்றுகின்ற வேலையைச் செவ்வனே செய்கிறதைக் காணும்போது 'கடைசியில் எல்லாம் அம்பேல்தானா?' என்கின்ற கேள்வி மனதில் உதிக்கவே செய்கிறது. அதேசமயம், இலங்கையின் காதில் மேற்கு நாடுகளும் தாம் இலங்கையிடமே பெற்றுக்கொண்ட அனுபவத்தைக் கொண்டு பூச் சுற்றுகின்றதைக் காணக்கூடியதாகவும் இருக்கிறது. அதுமட்டுமல்ல பிள்ளையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடுகின்ற மேற்கு நாடுகளின் செயலைக் காணும்போது நீதியை நிலை நாட்டும் பணியில் அவை எந்த அளவுக்கு உறுதியாக இருக்கும் என்பதையிட்டுச் சந்தேகம் எழவே செய்கின்றது.

நல்லாட்சியை இலங்கையில் நிலைநாட்ட மேற்கத்திய நாடுகள் இந்தியாவினூடாக நடவடிக்கை எடுத்து இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தை கட்டுக்குள் கொண்டுவர முயன்று வெற்றி கண்டிருந்தாலும், தம் நோக்கத்தில் முழு வெற்றி கண்டனவா என்றால் விடை 'இல்லை' என்றே ஆகிறது. இலங்கை தனது சீன வட்டத்துக் குள்ளிலிருந்து மீளமுடியாமலே இருக்கிறது. காணாமல் போனோர், பொறுப்புக் கூறல், விசாரணைப் பொறிமுறை என்று ஏகோபித்த கட்டுக்களில் இலங்கை அரசைச் சிக்கப் பண்ணியும் அத்தனை கட்டுக்களையும் ஹூடினி போல நழுவச் செய்யும் இலங்கையின் போக்கில் மாற்றத்தைக் காணாமலும், செத்துப்போனதாகக் கருதிய முன்னைய ஆட்சியாளர்கள் பலமாக மூச்சு விடத் தொடங்கியிருப்பதைக் கண்டும் மேற்கு நாடுகள் அதிருப்தி கண்டுள்ளமையை மறுக்கமுடியாது.

அதேசமயம் நல்லிணக்கம் என்கின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வடக்கில் (முக்கியமாக) மற்றும் கிழக்கில் தமிழர் நிலமீட்புப் பணிகள் கொஞ்சம் தீவிரமாகவே நடக்கத் தொடங்கியிருந்தன. இராணுவமோ அரசாங்கமோ எதிர்பார்த்ததை விட அதிகமாக நில விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்ளவேண்டியிருந்ததை அரசாங்கமோ, இராணுவமோ இரசிக்கவில்லை. சிக்கல்களை உருவாக்கினாலும் மக்களது விழிப்புணர்வு சற்றுக் கலக்கத்தை ஏற்படுத்தவே செய்திருந்தது. பாதுகாப்பைக் காரணம் காட்டியும் திருப்தியான முடிவை இராணுவம் கண்டடையவில்லை என்கின்ற சூழலே நிலவியது. மேலை நாடுகளின் அழுத்தம் வேறு தலையிடியைக் கொடுத்தது. அதற்கு ஒரு வழி தற்கொலை அங்கி வடிவத்தில் வந்து சேர்ந்தமை சற்றுக்கேள்விக் குறியே! சரியாக இந்த நேரம் பார்த்து,பாதுகாப்பைக் காரணங் காட்டி தன் நிலைப்பாட்டில் மாறாது நின்ற பாதுகாப்புத் தரப்புக்கு இந்தச் சமயம் பார்த்து, இரண்டு மனைவிக்காரன் (மூத்தவள் இல்லை என்றாலும்) அதுவும் கணவனுடன் சிண்டு பிடிப்பவளைக் கொண்ட குடும்பத்தவன் (அதுவும் அடையாளம் காணப் படக் கூடிய ஒரு முன்னாள் போராளி) ஒருவனைப் பயன்படுத்தி ஆபத்தான பொர்ருட்களைப் பதுக்கி வைக்கின்ற அளவுக்கு இயக்கம் முட்டாள்களின் குகையாகி விட்டது போற் தெரிகிறது? நிலவரம் முன்னைவிட எவ்வளவோ சீரடைந்து மக்கள் ஓரளாவது ஆறுதல் பெறும் சூழ்நிலையில் இது தேவைதானா?

- தொடர் 13ம் பக். ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதர்களை அறிவோம்




மற்றில்டா இராஜேந்திரம்

## மே – 2016



### மே 08ந் திகதி : புனித கன்னோசா மதலேன்

இத்தாலி நாட்டிலுள்ள வெரோனா எனுமிடத்தில் 1774ம் வருடம் பங்குனித் திங்கள் முதல் நாளில் பிறந்தவர் மதலேன். மார்குஸ் அக்டேவியஸ் கன்னோசா, மரிய தெரசே ஸ்லுகா ஆகியோர் இவரது தந்தையும், தாயும் ஆவர். ஆறு குழந்தைகளுள் மூன்றாவதாகப் பிறந்தார். செல்வமும், செல்வாக்கும் கொண்டது இவரது குடும்பம். ஒருவகையில் அரச குடும்பம் என்பது மிகப் பொருந்தும். ஐந்தாவது வயதில் தந்தையை இழந்தார். தாய் இரண்டாவது திரு.மணம் செய்துகொண்டு பிள்ளைகளை விட்டுவிட்டுச் சென்றுவிட்டார். இந்நிலையில் துயரத்தில் துவண்ட மதலேன் புனித கன்னிமரியாவைத் தாயாக ஏற்று ஆறுதல் பெற்றார். இறை அழைப்பைத் தன்னுள் உணர்ந்தவராகப் பதினேழு வயதில் துறவியாக முடிவெடுத்தார். இரு தடவைகள் கார்மேல் சபையில் சேர முயன்றும் முடியாது போனதால் வீடு திரும்பினார். பிரெஞ்சுப் புரட்சியால் உருக்குலைந்த தன் ஊரில் மிகச் சிரமப்பட்டுத் தன் குடும்பத்தைக் காத்தார். அழைத்தலையும் காத்துக்கொண்டார். இயேசு பெருமான் தன்னைச் சிலுவையில் கையளித்த துயரம், தூய மரியன்னையின் துயரம் ஆகியவற்றைத் தூய ஆவியார் மதலேனுக்கு வெளிப்படுத்திப் பக்குவப்படுத்திப் பணிபுரிய உந்துதலைக் கொடுத்தார். குடும்பத்தாரின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பணிபுரிய ஆரம்பித்தார். கிறிஸ்துவையும், ஏழைகளையும் பின்பற்ற வேண்டும். கற்பு, கீழ்ப்படிதல் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் எனும் முடிவுடன் 1808ம் வருடம் பெண் துறவிகளைக் கொண்டு துறவறச் சபையை ஆரம்பித்தார். கிறிஸ்துவின் இதயமாகவே மாறி அதிகத் தேவையில் இருப்போருக்கு உதவுவதே இறைசித்தம் என உணர்ந்தார். தூய ஆவியாரின் குரலுக்கு எப்போதும் செவி கொடுத்தார். ஒரு பாடசாலையை ஆரம்பித்து, மாணவ சமுதாயத்தின் மீது அதி அக்கறை கொண்டு பல பயிற்சிகளை வழங்கினார். எல்லா வயதினருக்கும் பொருத்தமான மறைக்கல்வி வழங்க வழிவகுத்தார். கிறிஸ்துவை அறியாதவர்க்கு அவர் பற்றியறிவித்தார். நோயுற்ற பெண்களை அன்பாகக் கவனித்தார். ஆண் துறவிகளைக் கொண்டு 1831ம் வருடம் வைகாசித் திங்கள் 23ம் நாளன்று வெனிஸ் நகரில் ஒரு துறவறச் சபையை ஆரம்பித்தார். 1835ம் வருடம் சித்திரைத் திங்கள் 10ம் நாளன்று இவரது இதயத்துடிப்பு நின்றது. 1988ம் வருடம் ஐப்பசித்திங்கள் 2ம் நாள் புனித 2ம் அருள் சின்னப்பர் திருத்தந்தை புனிதராக்கினார்.

### மே 22ந் திகதி : காசியா நகர புனித றீட்டா



தந்தையார் அந்தோனியா லோட்டி, தாயார் அமத்தா பெரி ஆகியோராவர். இவர்களின் மகளாக 1381ம் வருடம் இத்தாலியிலுள்ள ரோக்கா பொரேனா எனுமிடத்தில் றீட்டா அவதரித்தார். துறவு இல்லம் செல்ல அனுமதிதர வற்புறுத்திய மகளுக்கு மறுப்புத் தெரிவித்து 12 வயதிலேயே போலோ மான்சினிக்குத் திருமணம் செய்து வைத்தனர் பெற்றோர். வசதி படைத்த மான்சினி கோபக்காரர், ஒழுக்கமற்றவர், எதிரிகளைச் சம்பாதித்தவர். இவரது மோசமான வார்த்தைகள் மற்றும் வாழ்க்கை முறையால் றீட்டா துன்புறுத்தப்பட்டார். துன்பத்தைத் தாங்கினார். தமது தாழ்ச்சி, பொறுமை, இனிய குணங்களால் கணவரின் மனதை மாற்றினார். இரு ஆண் குழந்தைகள் பிறந்தன. நல்லவர்களாக வளர்த்தார். இவ்வேளையில் மான்சினி எதிரிகளால் கொல்லப்பட்டார். பிள்ளைகள் வளர்ந்தனர். மூத்தவனுக்கு 16 வயதானபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் தந்தையைக் கொன்றவர்களைக் கொல்ல முடிவெடுத்தனர். றீட்டா தடுத்தார். அவர்கள் கேட்காமல் போகவே, இறைவனைத் தஞ்சமடைந்து பிள்ளைகளுக்காக மன்றாடினார். இரு பிள்ளைகளும் திடீரென மரணமடைந்தனர். சோகத்தில் நின்ற றீட்டா காசியாவிலிருந்த புனித மரிய மதலேனாள் துறவு இல்லத்தில் சேர ஆசைப்பட்டார். ஆரம்பத்தில் மறுத்தார்கள். றீட்டா தன்னிலை பற்றி விளக்கம் அளித்தும் "உன் கணவனைக் கொன்றவர்க்கும் உன் குடும்பத்துக்குமிடையே சமாதானம் செய்துவிட்டு வா" எனச் சொன்னார்கள். அதன் படியே செய்தார். இவர் துறவு இல்லத்தில் சேர்ந்ததே புதுமைதான். இரவு நேரத்தில் முதன் முதல் அங்கு வந்தபோது கதவுகள் அடைக்கப்பட்டு அனைவரும் தூங்கிவிட்டிருந்தனர். அப்போது றீட்டாவின் பாதுகாவலர்களான புனிதர்கள் திருமுழுக்கு யோவான், அகுஸ்தின், டொலன்சியோ நகர நிக்கோலாஸ் ஆகியவர்கள் அற்புதமாக றீட்டாவை மடத்திற்குள் தூக்கிக் கொண்டுபோய்ச் சேர்த்தனர். காலையில் கண்விழித்தெழுந்த மற்ற அருட்சகோதரிகள் அதிர்ச்சியடைந்தனர். ஆனாலும் றீட்டாவைத் திருப்பியனுப்பாது, தம்முடன் இணைத்துக்கொண்டனர். அங்கு புனித அகுஸ்தினாரின் சட்டதிட்டப்படி வாழ்ந்த றீட்டா 1457ம் வருடம் வைகாசித் திங்கள் 22ந் திகதி இறந்தார். திருத்தந்தை 13ம் சிங்கராயர் 1900ம் வருடம் வைகாசித் திங்கள் 24ந் திகதி புனிதர் பட்டத்தை வழங்கினார்.

### மாணவர் பக்கம் ....

... குறையோடிருப்பவரை இங்கு காணமுடியவில்லை. இவர்கள் வாழ்வில் அறப்பணி முக்கிய இடம்பெற்றது. கைம் பெண்கள், அநாதைகள், முதியோர் சிறப்பாகக் கவனிக்கப்பட்டனர். இவ்வாறு முதல் கிறிஸ்தவர்களின் அன்பு நிறைந்த, பகிர்ந்து வாழும், முன்மாதிரிகையான வாழ்வின் நிமித்தம், மற்றவர்கள் அவர்கள் மேல் நன்மதிப்புக் கொண்டோராயினர். பலர் இவர்கள் வாழ்வினைப் பின்பற்றினர். திருமுழுக்குப் பெற்று நாளுக்கு நாள் திருச்சபை பெருகியது. இத்தகையோர் திருச் சபையில் இருப்பினும், அனனியா, சபிராள் போன்றோரையும், கிரேக்க மொழி பேசும் யூதர்களுக்கும் எபிரேய மொழி பேசும் யூதர்களுக்குமிடையிலான சில பிணக்குகளையும் காணமுடிகிறது. நிறைவுகள் பல காணப்படினும் சில குறைகளும் காணப்பட்டன. இருப்பினும் திருச்சபை உறுதிப்பட்டு விளங்கியதைக் காணமுடிகிறது.

### அரசியல்...

... இதேநேரம், பாதிக்கப்பட்ட மக்களுக்கென உருவாக்கப்படும் வீட்டுத் திட்டம் தொடர்பாகப் பிரச்சினைகளும் எழுந்துள்ளமையை நோக்கவும் வேண்டும். இத்திட்டம் வடக்கிற்கு மட்டுமானதா? அல்லது கிழக்கையும், மலையகத்தையும் உள்ளடக்கியதா தெரியவில்லை. பத்திரிகை விளம்பரம் பார்த்து மக்கள் நிருவாக அதிகாரிகளிடம் சென்றால் இன்னும் அறிவுறுத்தல் வரவில்லை எனப்படுகின்றது. அதே நேரம் உரிய துறைக்கான அமைச்சரோ எல்லாம் தீர்க்கமானது போல் அறிக்கை தருகிறார். மக்கள் யாரை நம்புவது? அதேசமயம் தரப்படவிருப்பதாகக் கூறப்படும் வீடுகள் நமது வெப்ப தட்ப நிலைகளுக்கு ஈடு கொடுத்து மக்களுக்கு உகந்தததாக இருக்க முடியுமா? குறிப்பாக, இன்றைக்கு நிலவும் கால நிலையால் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களுக்கு இது சம்பந்தமாக மனதில் கேள்வி எழுவது நியாயமானதே. தமிழ்ப் பிரதிநிதிகள் அதுவும் நம்மவர்கள் இன்னும் வீர வசனங்களைப் பாடமாக ஒப்புவித்துக் கைத்தட்டல்களை வாங்குவதிலேயே வீரர்களாக இருந்துகொண்டிருப்பது வேதனையானது. வேலைவாய்ப்பில் நடந்துகொண்டிருக்கும் அநீதிகள் தொடருகின்றன. வீட்டுத்திட்டம் நம் மக்களுக்குரியதா என்ற கவலையில்லை. ஆசிரியர் இடமாற்றங்கள் மட்டும் முனைப்புடன்!

சாதாரண வாழ்வாவது கிட்டுமா என்று அங்கலாய்ப்பு தொடர்கதையாக நீள்கிறது. கைதிகள் வாழ்வில் முன்னேற்றம் கிடையாதது ஒரு புறம். மக்கள் இன்னும் எவ்வளவு காலத்திற்குத்தான் தடை தாண்டி ஓடிக்கொண்டிருப்பது? அதுவும் வழமைப் பிரகாரம் விலைவாசி உயர்வுகள் இப்போது இரவில் நடமாடும் திருடன் போல பதுங்காமலே வரும்போது மக்கள் எப்படி நிம்மதி அடைவது? முன்னர் ஒரு அரசி பாண் இல்லையெனப் போராடிய மக்களுக்கு, 'மூடச் சனங்கள்! பாண் இல்லாவிட்டால் என்ன? 'கேக்' கிடைக்கிறதுதானே?' என்று கூறியதுபோலவே ஒரு அமைச்சர், மக்கள் சோறு சாப்பிட வேண்டும் என்பதற்காகவே பாணின் விலையை உயர்த்தி இருக்கிறாராம். இந்த தசாப்தத்தின் மிகப் பெரிய 'ஜோக்' என்று எடுத்துக்கொள்ளலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவம்

## இளநீர் பருகுவதால் உண்டாகும் நன்மைகள்

**கோ**டை என்றால் முதலில் நமக்கு ஞாபகம் வருவது இளநீர் தான். மற்ற பானங்களை விட இளநீருக்கே மதிப்பு அதிகம். இது இயற்கையான மற்றும் ஆரோக்கியமான பானம் என்பதால் இதை அதிகம் விரும்புவர். மேலும், இது தாகத்தைத் தணித்து புத்துணர்ச்சியும் அளிக்கிறது. அடிக்கும் கோடை வெயிலில் பச்சை இளநீரை நேரடியாக அதன் மட்டையிலிருந்து அப்படியே பருகுவது என்பது ஒரு பேரானந்தமாகும். இது புத்துணர்ச்சி தருவது மட்டுமல்லாது பல உடல் நல நன்மைகளையும் அளிக்கிறது. இந்த நீரில் விட்டமின்கள், கனியங்கள், மின்பொருட்கள், என்சைம்கள், அமினோ அமிலங்கள் மற்றும் சைட்டோகைனின் வளமாக இருக்கின்றன. இளநீர் அதன் ருசிக்கும், நமக்கு அளிக்கும் புத்துணர்ச்சிக்கும், மருத்துவ குணங்களுக்கும் உலகம் முழுவதும் புகழ் பெற்றுத் திகழ்கிறது.

மேலும் இளநீரில் உடலுக்குத் தேவையான பி காம்ப்ளக்ஸ், விட்டமின்களான ரிபோஃப்ளேவின், நியாசின், தையமின், பைரிடாக்சைன் மற்றும் ஃபோலேட் ஆகியவைகள் இயற்கையிலேயே கிடைக்கின்றன. மேலோட்டமாக இது ஆரோக்கியத்திற்கு நல்லது என்பதை அனைவரும் அறிவோம். ஆனால் இதில் உள்ள மருத்துவக் குணங்களை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டாமா? சரி கொஞ்சம் விரிவாகப் பார்க்கலாம்...

**வயிற்றுப்போக்கு:**
வயிற்றுக் போக்கு அதிகளவில் இருக்கும் போது நீர்ச்சத்து அதிகளவில் குறைவதால், இளநீர் அருந்துவது மிகவும் நல்லது. இளநீரில் அமினோ அமிலங்கள், என்சைம்கள், சாப்பிடக்கூடிய நார்ச் சத்துக்கள், விட்டமின் சி, பொட்டாசியம், மெக்னீசியம் மற்றும் மேன்கனீஸ் போன்ற கனியங்கள் அதிகளவு உள்ளன. மேலும் இதில் உள்ள நல்ல அளவிலான எலெக்ட்ரோலைட் பொட்டாசியம், உடம்பில் வயிற்றுப் போக்கி னால் ஏற்படும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலெக்ட்ரோலைட் குறைப்பாட்டை நீக்க உதவும்.

**எடை குறைவு:**
இளநீரில் குறைந்த அளவே கொழுப்பு இருப்பதால் அதனை • பருகினால் வயிறு நிறைந்து போவதால், அதிகமாக உணவுகளைச் சாப்பிட முடியாமல் உடல் எடை குறைய உதவுகிறது.

**நீரிழிவு:**
இளநீரில் சர்க்கரை நோயாளிகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் இருப்பதனாலும், இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை கட்டுப்பாட்டில் வைக்க உதவுவதாலும், சர்க்கரை நோயாளிகள் இளநீர் பருகுவது நல்லது.

**வைரஸ் நோய்கள் :**
சளிக் காய்ச்சல் மற்றும் ஹேர்ப்ஸ், இவை இரண்டுமே சில வைரஸ் கிருமிகள் நம் உடம்பை தாக்குவதால் ஏற்படுகிறது. இளநீரில் ஆன்டி-பாக்டீரியல் மற்றும் நோயெதிர்ப்பு சக்தி அடங்கியிருப்பதால், மேற்கூறிய வைரஸ் தாக்குதலுக்கு நல்ல மருந்தாக இது அமைகிறது.

**உடல் வறட்சி:**
உடல் வறட்சி பிரச்சனைக்கு இளநீரை நரம்பின் வழியாக உடம்பில் ஏற்றலாம். மிகவும் தொலைவில் எந்த ஒரு மருத்துவ வசதியும் இல்லாத இடத்தில் வசிக்கும் நோயாளிகளுக்கு, இப்பிரச்சினை ஏற்பட்டால் தற்காலிகமாக இந்த அணுகு முறையைக் கையாளலாம்.

**இரத்த அழுத்தம்:**
இளநீரில் வளமான அளவு பொட்டாசியம் இருப்பதால் அது கூடுதல் இரத்த அழுத்தம் மற்றும் வாதத்திற்கும் நல்ல மருந்தாக அமைகிறது.

**சிறுநீரகக் கற்கள்:**
பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் போன்ற கனியங்கள் இளநீரில் அதிகம் இருப்பதால், இது சிறுநீரகத்தில் கற்கள் வருவதைத் தடுக்கும்.

**சரும பிரச்சனைகள் :**
பருக்கள், புள்ளிகள், சுருக்கங்கள் மற்றும் படை ஏற்பட்ட சருமங்களில் இளநீரை இரவில் படுக்கும் போது தடவி, காலையில் கழுவ வேண்டும். இதைத் தொடர்ச்சியாக மூன்று வாரங்கள் செய்தால் சரும பிரச்சனைகள் சரியாகும்.

**புற்றுநோய் :**
சில ஆய்வுகளின் படி, இளநீரில் சைட்டோகைனின்கள் இருப்பதால் முதுமைத் தோற்றத்தைத் தடுக்கவும், கார்சினோஜெனிக் மற்றும் த்ரோம்பாட்டிக்களை தடுக்கவும் உதவுகிறது. மேலும் இதிலுள்ள செலினியம் போன்ற ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் புற்றுநோய்க்கு எதிராகவும் விளங்கும்.

**பொலிவான சருமம் :**
இளநீரில் கால்சியம், இரும்பு, மாங்கனீசு, மெக்னீசியம் மற்றும் ஜிங்க் போன்ற கனிமங்களின் கலவை உள்ளது. இந்த அளவு முன்பின்னாக இருந்தாலும், இவைகளில் உள்ள கனியங்களின் கலவை, ஆரஞ்சு போன்ற பழங்களை விட அதிகமாகவே உள்ளன. ஆகவே சருமம் பொலிவாக மின்னும்.

எனவே, இக் கோடை காலத்தில் முடிந்தவரை இளநீரைப் பருகி நோயிலிருந்து எம்மைக் காத்துக் கொள்வோம்.



**சில மருத்துவக் குறிப்புகள்....**

**வேர்க்குரு நீங்க** - சந்தனத்தை பன்னீரில் அரைத்துப் பூசலாம்.

**பற்கள் உறுதியாக இருக்க** - மாவிலையை பொடி செய்து பல் துலக்கினால் பற்கள் சுத்தமாகவும் உறுதியாகவும் இருக்கும்.

**தொண்டை கம்மல் தீர** - கற்பூர வள்ளிச் சாற்றில் கற்கண்டுத் தூள் ஒரு சிட்டிகை போட்டுச் சாப்பிட்டால் தொண்டைக்கம்மல் நிவர்த்தியாகும்.

**தும்மல் நிற்க** - தூதுவளை பொடியில் மிளகு பொடி கலந்து தேனில் அல்லது பாலில் கலந்து சாப்பிட தும்மல் நிற்கும்.

**வயிற்று வலி நீங்க** - வெந்தயத்தை நெய்யில் வறுத்துப் பொடி செய்து மோரில் குடிக்க வயிற்று வலி நீங்கும்.

**வயிற்று நோய் குணமாக** - சீரகத்தை வறுத்துப் பொடி செய்து மோரில் கலந்து சாப்பிட வயிற்று நோய் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் மண்ணின் மைந்தனும், எமது பங்கின் மைந்தனுமாகிய அருட்தந்தை: சந்திரகுமார் அன்ரன் பிரதாப்ராஜ் இயேசுசபை அடிகள், புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலயத்தில் 02.04.2016 அன்று சனிக்கிழமை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதிவந். கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். மறுநாள் காலை 6.15 மணியளவில் திருப்பொழிவு செய்யப்பெற்ற மண்ணின் மைந்தன் தனது முதல் திருப்பலியைப் பங்கு ஆலயத்தில் நிறைவேற்ற, மங்கள மேள தாளங்கள் முழங்க குருப் பிரசாதிகள், துறவிகள், இறைமக்கள் புடைசூழப் பங்குப் பணிமனையிலிருந்து அழைத்துவரப்பட்டார். இவர் 1981ம் வருடம் மாசித் திங்கள் 4ம் நாளிலே அதாவது எமது நாட்டின் சுதந்திர தினத்தன்று பிறந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியை மட்/புனித செபஸ்தியார் தமிழ்க் கனிஷ்ட வித்தியாலயத்திலே ஆரம்பித்தார். 5ந் தரத்தைப் பூர்த்தி செய்ததும், மட்/அரசடி தமிழ்க் கலவன் மகாவித்தியாலயத்தில் (தற்போதைய மட்/மஹாஜனக் கல்லூரி) சேர்ந்து 6 முதல் 11ந் தரம் வரை கற்று க.பொ.த. சாதாரண தரப் பத்திரப் பரீட்சையை எழுதினார். க.பொ.த. உயர்தரத்தை மட்/இந்துக் கல்லூரியில் தொடர்ந்த வேளையில் மன்ரேசாவில் இணைந்து கொண்டார். 2002ம் வருடம் நீர்கொழும்பு இயேசுசபை இல்லம் சென்றார். 2003ம் வருடம் களனியா சென்று நவசந்நியாசத்தை ஆரம்பித்தார். 2005ம் வருடம் முதல் 2007ம் வருடம் வரை இந்தியா – மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் தமது மெய்யியல் கல்வியைப் பூர்த்திசெய்து பட்டதாரியானார். 2008ம் வருடம் கொழும்பு – பம்பலப்பிட்டி 'நிர்மலா' இல்லத்திற்கு அனுப்பப்பட்டார். 2010ம் வருடம் முதல் 2012ம் வருடம் வரை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் மனித உரிமைச் சட்டம் பற்றிக் கற்றார். 2012ம் வருடத்திலேயே பிலிப்பைன்ஸ் சென்று இறையியல் கல்வியை ஆரம்பித்தவர் இந்த வருடம் (2016) பங்குனி மாதம் வரை அங்கேயே கற்றலைத் தொடர்ந்த நிலையில் 2015ம் வருடம் புரட்டாதித் திங்கள் ஐந்தாம் நாளிலே தியாக்கோன் நிலையைப் பெற்றார். சிறு வயது முதலே சிரித்த முகத்துடன், தானும் சிரித்துப் பிறரையும் சிரிக்க வைத்து மகிழ்விக்கும் பண்பு கொண்ட இவரை வாழ்விலே பல வகையிலும் இறைவன் தம் கரங்களில் வைத்துத் தாங்கினார் என்றால் அது மிகையாகாது. இறைவன் இவரைத் தம் பணிக்கு அழைத்துள்ளமை எமது பங்கிற்கே பெருமை சேர்க்கும் ஒன்றாகும். இவரை உளமார வாழ்த்துவதோடு, தமது பணி வாழ்வில் என்றும் சிறக்கவேண்டிய அருள் வரங்களை இந்த இளங் குருவுக்கு வழங்கவும், இறைவனை வேண்டுவதோடு, அவருக்குத் தேவையான உடல், உள ஆரோக்கியத்தையும், ஆன்மீக நலனையும் வழங்கி என்றுமே நற்குரு வாக வாழவும் அருள் வேண்டுவோம்.




செல்வி. மற்றில்டா இராஜேந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகெங்கும் மரியாளின் புகழ் ...

## கண்ணீரின் அன்னை

ஃபொலீனோ, இத்தாலி

(13)



17வது நூற்றாண்டைச் சேர்ந்த மரத்தாலான கண்ணீர் சிந்தும் அன்னையின் திருவுருவச் சிலை ஒன்று ஃபொலிக்னோ நகரில் பக்தி மரியாதையுடன் போற்றப்பட்டு வருகிறது. 1944ல் இரண்டாம் உலகப் போரின்போது, கண்ணீரின் அன்னை ஆலயம் நாசமாக்கப்பட்டதால் இத்திருச்சிலை புனித அகஸ்தின் ஆலயத்தில் வைக்கப்பட்டது. 1703ம் ஆண்டு ஜனவரி 14ம் திகதி கண்ணீரின் அன்னை திருவிழா கொண்டாட்டத்தின்போது, இந்நகரம் நில நடுக்கத்தால் தாக்கப்பட்டது. நாடு முழுவதிலும் பாதிப்பு ஏற்பட்டபோதும் ஃபொலிக்னோ நகரம் பாதிப்பின்றி தப்பியது. அன்னையின் அருட்கொடைக்கு நன்றிகூறும் விதமாகவும் பக்தியின் அடையாளமாகவும், அந்த ஆண்டு ஜனவரி 28ம் திகதி முதல் முறையாக அன்னையின் திருவுருவம் பவனியாக நகர வீதிகளில் எடுத்துச் செல்லப்பட்டது. விரைவாக வளர்ச்சியடைந்த இந்த பக்தி முயற்சியின் காரணமாக 1713ம் ஆண்டில் அன்னையின் புதிய திருவுருவச் சிலைக்கு முடி சூட்டப்பட்டது. இந்நகரை கடுமையான இயற்கை பேரழிவு தாக்கக்கூடும் என்ற அச்சம் ஏற்படும்போதெல்லாம், அன்னையின் இத்திருச்சிலை வணக்கம் செலுத்துவதற்காக மக்கள் பார்வைக்கு வைக்கப்படுகிறது.



இன்று நமது உலகைப் பற்றி
எண்ணிப் பார்க்கவே
அச்சமாக இருக்கிறது.
ஆசைகள் பலவகை
மனங்களிலே நஞ்சாகி
கழுத்தறுத்துக் கொண்டிருக்கின்றன;
சன்னமழை பொழிகின்றன.
குறிப்பாக, அதிகாரம் மீதான ஆசை
வெறியாக மாறி குத்தாட்டம் போடுகின்றது.
அதற்கு மதச் சாயம் வேறு!
அன்பு ஆசையாகி தீவிர வெறியாகி . .
மக்கள் உள்ளத்தை மதங் கொண்ட யானையாக
உருவாக்கி . . .
எண்ணிப் பார்க்கையில் அச்சமாக இருக்கிறது!
ஆழச் சிந்திக்கையில் ஒன்று தெரிகிறது. . .
அன்பின் வல்லமை
அதிகாரத்தின் மிதான ஆசையை
வெற்றி காணும்போதுதான்
உலகம் அமைதியை அனுபவிக்கும்.
அந்தநாள் எப்போது?

## எண்ணிப்பார்க்கையில் ...

- ஆனந்தா ஏ.ஜீ. இராஜேந்திரம் -

## முள் வேலி

- தொடர்ச்சி ...



ஆசாமிக்குச் சரியான பாடம் படிப்பித்ததில் அவளுக்குப் பரம திருப்தி. வாலை ஒட்ட நறுக்கியாயிற்று. தன்னைக் கண்டால் இனி அவர் திரும்பியும் பார்க்கமாட்டார் என்று நிச்சயப்படுத்திக் கொண்டாள்.

ஏனெனில் —

இவள் ஜன்னலுக்கூடாகத் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டதும், அவன் முகம் கோணி, பார்வையைத் திருப்பிக்கொண்டதில் அவள் புரிதல் சரியாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தகப்பனத்தின்னி

– பைந்தமிழ்க் குமரன் டேவிட் –

ரண்டு வருடங்களாக வேலைக்காகத் தாய் போக, வயது போன அம்மம்மாவுடன் கழிந்த பிஞ்சுக் காலங்கள் எல்லாம் பாசத்திற்காக ஏங்கித் தவித்த ரணங்களாய்ப் போயின.

அவள் ஓ.எல் படிக்கும்போது கூட அவளின் அம்மா குவைத்தில் வேலை செய்தாள். அவள் தேடிய பாசம், பந்தம், அரவணைப்பு எல்லாம் கானல் வசந்தங்களாகிப்போன நிலையில் கொழுகொம்பு தேடும் கொடியாகக் கழிந்த அந்த நாட்கள். அவனது சந்திப்பு. மென்மையானவன். விடாமுயற்சி கொண்டவன். உயர்தரத்தில் பல்கலைக்கழகப் படிகளைத் தவறவிட்டுத் தொழில் தேடியலைந்துகொண்டிருந்தான் வினோதன். ஜீவிதாவுக்கும் அவனுக்கும் மலர்ந்த பருவக் காதல் அவள் பரீட்சை எழுத முன்னமே இல்லறத்தில் இணையச் செய்துவிட்டது.

இன்று இரண்டு மழலைச் செல்வங்கள். மூத்தவள் தரம் ஆறும், இளையவள் தரம் மூன்றும் படிக்கிறார்கள். ஜீவிதா இன்னும் திகைப்பிலிருந்து மீளவில்லை. தோளைத் தொட்டு உலுக்கினார் சித்தப்பா. 'வ.... வந்து சித்தப்பா ...

"நீ நம்பமாட்டா பிள்ள நான் எதிர்பாராம அவரச் சந்திச்சன். என்ர கண்களையே என்னால நம்ப முடியல்ல"

"சித்தப்பா எனக்கு ஆயிரத்தெட்டு வேலையிரிக்கி. இவள் இளையவளுக்கும் காய்ச்சல். என்ன விசயம். ஆரக் கண்டனீங்க எண்டு சொல்லுங்களன்"

தன் நரை முடியைத் தடவி விட்டபடியே குரலைச் செருமிக்கொண்டார்.

"ஆரப்பத்தி சொல்லப்போறன் பிள்ள. உனக்கு இப்ப இருபத்தெட்டு வயசு. நீ மூணு வயசா இரிக்கக்குள்ள விதி அள்ளிக்கொண்டு போச்சுதே ... உன்ர அப்பன் அவரத்தான் கண்டன் பிள்ள..."

எதிர்பாராமல் இடி முழக்கம் அதிர்ந்தது. அவள் உள்ளத்தை உசுப்பியது. மங்கிப்போன பழைய புகைப்படத்தில் தாயின் அருகே நிற்கும் அந்த உருவம், தனக்கு அறிமுகமில்லாத உணர முடியாமற்போன உறவு, ஞாபகத் தாள்களில் எங்குமே பதிவுகள் இல்லாத தோற்றம், நினைவுகளில் நிழலாடியபோது தேடிக் களைத்தாள் ஜீவிதா. எத்தனை எத்தனையோ வசை மொழிகள், கேலிகள், கிண்டல்கள், 'தகப்பனத்தின்னி, தகப்பனத் தின்னி' என்ற வசை கேட்டுக் கேட்டு மனம் மரத்துக் கிடந்தது.

வேலைக்குப் போன அப்பா வரவேயில்லையாம். கொடிய யுத்த நாட்கள் அவை. தாய் ஊர் ஊராகத் தேடியலைந்தாள். சீருடைகளின் முகாம்களில் தவம் கிடந்தாள். போராளிகளிடம் மன்றாடினாள். எல்லோருமே கையை விரித்துவிட்டனர். காணாமற் போனோர் பட்டியலில் மணிவாசகம் என்ற பெயரும் சேர்க்கப்பட்டது. மரணப்பதிவு தருகிறோம், ஐம்பதாயிரம் எடுக்கலாம் என்றார்கள். மறுத்துவிட்டாள் தாய். மத்திய கிழக்கில் இரண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன சொன்னீங்க .... அ...
அப்பா ... என்ர அப்பா....
உய்ரோட ... இரிக்காரா...?"

அகல விழித்த கண்களுடன் அவரைப் பார்த்தாள்.

"போன கிழம நுவரெலியாவுக்குப் போயிருந்தன். பக்கத்தில போக வேண்டிய ஒரு வேலை. போனப்ப அங்கதான் எதிர்பாராம உன்ர அப்பனக் கண்டன். எழும்பி நடக்கக்கூட ஏலாத நிலம... கொஞ்சம் பொறு பிள்ள ..."

என்றவர் செல்பொனில் அழுத்தினார். எதிர்முனை உயிர் பெற்றது.

"ஆ... துரைராசா .... நானிஞ்ச வடிவேலு கதைக்கிறன். அங்க பக்கத்தில மணிவாசகத்திற்ற கொஞ்சம் போனக் குடு... முக்கிய விசயமொண்டு கதைக்க வேணும்"

ஜீவிதாவின் இதயத் துடிப்புகள் பல மடங்காகின. தொண்டை அடைத்து கண்கள் குளமாகின. கைகளில் மெல்லிய நடுக்கம் படபடப்பு.

"மணிவாசகம் அண்ணன் .... இந்தா பக்கத்தில உங்கட மகள் இரிக்கிறா..... கதையுங்க..."

நீட்டினார். அவள் திகைப்பிலிருந்து இன்னும் மீளவில்லை.

"மகள் .... மகள் ..... நா...நா... அப்பா கதைக்கிறன் மகள்..."

நடுக்கம், தவிப்பு கரகரத்த குரலில் தெரிகிறது. அவள் என்ன பேசுவது? எப்படிப் பேசுவது? எதுவும் புரியவில்லை.

"அ... ப்பா .... அப்பா அப்பா"

நடுங்கும் கைகளில் தொலைபேசி விம்மி விம்மி அழுதாள். 'அப்பா.... அப்பா ....' என்ற சொற்கள் மட்டுமே அடித் தொண்டையில் இருந்து



" மனங்கள் இருப்புக்கொள்ளவில்லை. தந்தையின் குரல் சுமந்துவந்த சோகங்களைக் கூறிக் கூறி அழுதனர். அடுத்தநாள் காதில் கிடந்த தோடு அடகுக் கடையில் அடைக்கலமானது. அப்பாவுக்கு பெற்சீற், சாறன், சேர்ட் எல்லாம் வாங்கிக்கொண்டாள். "

விக்கலிடையே வெளிப்பட்டது. தனக்கு நேர்ந்த நிலையை அந்தச் சில நிமிடங்களில் கூற முற்பட்டுத் தோற்றுப் போனவராக இருமல் மூச்சிழுப்படன் தொடரமுடியாமல் கைமாற்றினார். புலி முத்திரை குத்தப்பட்ட அப்பாவியான அவர் முகாம்களில் பட்ட சித்திரவதைகளை உணர்ந்தாள். வருடக் கணக்கில் சிறைவாசம். மனைவி உயிருடன் இல்லை. என்ன ஆனாள் என்றே தெரியாது எனும் செய்தி. இவற்றால் விரக்தியின் எல்லையில் கழிந்த காலங்கள்.

ஊனமுற்ற உள்ளத்தால் நடமாடமுடியாமல் தவித்து, கால் தடுக்கி விழுந்து, படியில் அடிபட்டு, தலை உடைய வலது கையையும், காலையும் பாரிசவாதம் இழுத்துக்கொள்ள; குப்பை ஏற்றும் லொறியில் கொண்டுவந்து அந்தக் கோவிலடியில் போட்டுவிட்டுப் போனார்கள். கண்கள்கூட பஞ்சடைந்து போயிற்று. எலும்பும் தோலுமாய் நெஞ்சுக்கூட்டினுள் மட்டும் இழுக்கம் மூச்சுடன் கிடந்த மணிவாசகத்திற்குத் தன் மனைவியும், மகளும் இருக்கிறார்கள் என்ற செய்தி பதைபதைப்புடன் ஒரு அவாவை ஏற்படுத்தியது. தேர்முட்டியின் தாழ்வாரத்தில் யாராவது போடும் எச்சில் சோற்றுக்காகக் காத்துக் கிடக்கும் அவரால் என்னதான் செய்யமுடியும்?

ஜீவிதாவின் கையில் பெரியளவில் காசு இல்லை. வேகம்... வேகம்... நடந்தாளா? ஓடினாளா? தெரியவில்லை. அழுகையுடன் தொண்டை கட்டிப்போன நிலையில் தாயிடம் கூறிமுடிக்க முன்னமே,

"எ... எ... என்ன மகள்.... அப்பாவா.... அப்பா...."

மயக்கமாகிச் சரிகிறாள் தாய். மனங்கள் இருப்புக் கொள்ளவில்லை. தந்தையின் குரல் சுமந்துவந்த சோகங்களைக் கூறிக் கூறி அழுதனர். அடுத்தநாள் காதில் கிடந்த தோடு அடகுக் கடையில் அடைக்கலமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவுக்கு பெற்சீற், சாறன், சேர்ட் எல்லாம் வாங்கிக்கொண்டாள். பிள்ளைகளது பாடசாலை அதிபரிடம் கெஞ்சிக் கூத்தாடி அனுமதி யும் பெற்றுப் பஸ் தரிப்பிடத்திற்கு ஓடினாள். மறுநாள் அதிகாலை மூணு மணிக்குத்தான் பஸ். இரண்டு நாட்கள் கடந்துவிட, மூன்றாவது நாள் அதிகாலையே அந்த நீண்ட பயணத்தில் இணைந் தது குடும்பம். பிள்ளைகளுக்கு மட்டும் எதையோ வாங்கிக்கொடுத்தாள்....

"அம்மப்பாவப் பாத்திரலாம் மக்காள்"

என்று ஆறுதல் கூறும்போது தொண்டையடைக் கும். பொழுதுசாயும் நேரம் பஸ் போய்ச் சேர்ந்தது. அவசரமாக இறங்கினார்கள்.

அம்மன் கோயிலடியில் சில்லறைக் கடை நடத்தும் துரைராசாவைச் சந்திக்கவேணும். அவர்தான் அப்பாவக் காட்டுவார். ஓட்டோ ஓடிய வேகத்தை விட, அவர்களது இதயங்கள் வேகமாகின. கடையடி எதிரே உயர்ந்த அம்மன் கோயில்.

"அண்டைக்கி போணில கதைச்சது நான் தான். இது என்ர அம்மா. நாங்க மணிவாசகம்....."

"என்ர சீதேவிகளா இப்பதானோ வாறயள்.... எல்லாம் நேத்தே முடிஞ்சுதே"

காதுகள் அடைத்துப்போக அறைந்தபடியே,


"என்ர தாயே என்ர தாயே..."


என்ற விம்மலுடன் தாய் தரையில் குந்திவிட்டாள். நேற்றைக்கு முன்தினம் காலையில் தேர்முட்டித் தாழ்வாரத்தில் அனாதைப் பிணமாய்ச் செத்துக் கிடந்த மணிவாசகத்தைக் கோயிலாக்கள் சேர்ந்து நேற்றே அடக்கம் செய்ததையும், படுத்துக்கிடந்த இடத்தையும் கழுவி மஞ்சத் தண்ணி தெளிச்சதை யும் சொன்னார்.

தாயும், மகளும் எவ்வளவோ அழுதார்கள். பிள்ளைகள் பசிக்குதம்மா என்றபோதுதான் சுதாகரித்தாள். கோயிலடி மண்டபத்தில் அன்றைய இராப்பொழுது கழிந்தது. அடுத்தநாள் காலை மீண்டும் அவர்களது நீண்ட பயணம் தொடங்கிற்று. மூன்று வயதில் கர்ணகடூரமாக ஒலிக்கத் தொடங்கிய "தகப்பனத்தின்னி" என்ற வார்த்தை இப்போதும் கேட்கிறது......



பாகிஸ்தானின் லாகூர் நகர் பொது மக்கள் பூங்கா ஒன்றில், கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டா டிக் கொண்டிருந்த மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டு வெடிப்புத் தாக்குதலில், பல அப்பாவி மக்கள் கொலை செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கின்றது என்று சொல்லி, இத்தாக்குதலுக்கு எதிரான தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ், வன்முறையும், கொலைக்கு இட்டுச்செல்லும் வெறுப்பும் வேதனை மற்றும் அழிவையே கொணரும். ஒருவரை யொருவர் மதிப்பதும், உடன்பிறப்பு உணர்வுமே அமைதியை அடையும் ஒரே வழி என்று மீண்டும் சொல்கிறேன் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ். வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் கூடியிருந்த அனைவரோடும் சேர்ந்து அன்னைமரியை நோக்கிச் செபித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளைக்கொடி

எங்க மச்சான்
வெள்ளைக் கொடியோடு போறா
சறண்டராகப் போறேன்
அம்மாவிடம் எனது அம்மாவிடம்

சின்ன வயது
அம்மாவின் கைபிடித்து
பூசைக்கு செல்வேன்
இப்போது
பூசைக்குச் செல்வதேயில்லை

பாலக வயது
பத்துக் கற்பனைகள் படித்தேன்
பத்தையும் கொன்றுவிட்டேன்
அம்மாவை ஏமாற்றினேன்
சரணடையப் போகிறேன்

இளைஞனானேன்
இளமை இரத்த ஓட்டம்
கால்போன போக்கானேன்
கடும் பாவியானேன்
இப்போது
அம்மாவிடம் வெள்ளைக் கொடியுடன்
சரணடையப் போகிறேன்.

திருச்சபைக் கட்டளைகளின்
தலைமைகளைத் திருகிவிட்டேன்
அம்மா எனக்காக
மாதாவிடம் பரிந்து பேசுவா
சரணடையப் போகிறேன்

கொஞ்சம் நில்லு மச்சான்
உன்ர அம்மாவிடமா செல்கிறாய்
ஆமாம்! அம்மாவின் முகத்தை
ஓர் தடவை பார்த்தாலே பேறு

நீ அம்மாவைக் காணமாட்டா
ஏன்! ஏன்!
என் அம்மாவுக்கு என்ன
நடந்தது?

காணாமல் போனோரில்
உன் அம்மாவும் ஒருவர்....
அம்மா! அம்மா! அம்மா!

**கலைக்கோட்டன் அ. இருதயநாதன்**

## மட்/மறைமாவட்டச் செய்திகள்:

மட்டக்களப்பு மறைக்கோட்ட குருமுதல்வரான அருட்தந்தை: S.இக்னேசுஷியஸ் அடிகள் வெளிநாடு சென்றதால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு மட்டக்ளப்பு-தாண்டவன்வெளி புனித காணிக்கை அன்னை ஆலயப் பங்குத்தந்தை 23.03.2016 முதல் மட்டக்களப்பு மறைக்கோட்ட குருமுதல்வராக ஆயரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அருட்தந்தை R.பயஸ் பிரசன்னா அடிகள் புனித திரேசாள் ஆலயம்-ஆரையம்பதிப் பங்கு. புனித லூர்த்து அன்னை திரு யாத்திரைத்தலம் - நாவற்குடாவின் பதில் பங்குத்தந்தையாக 28.03.2016 முதல் ஆயரால் நியமிக்கப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் தினம்

– ஆனந்தா ஏ.ஜீ. இராஜேந்திரம் –

இன்று தொழிளாளர் தினம். இயேசுவின் வளர்ப்புத் தந்தை– தன் தச்சத் தொழில் மூலம் இயேசுவையும்,மரியாளையும் பாதுகாத்தவரான தூய வளனாரின் பாதுகாப்பில் திருச்சபை உலகெங்கிலும் வாழும் தொழில் புரியும் மக்களை ஒப்படைத்திருக்கும் நாள்.

தொழில் சார் அல்லது உழைப்பு சார் உலகில் இரண்டு வகையான பிரிவினர்கள். தொழில் தருவோர் முதலாளிகளாகவும், தொழில் பெறுவோர் தொழிலாளிகளாகவும் இனங் காணப்படும் உலகம் அது. முதலாளி இல்லாது தொழிலாளி இல்லை தொழிலாளி இல்லாது முதலாளி இல்லை என்கின்ற தத்துவம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலேயே தொழில் துறை முன்னேறும். முதலாளியும்,தொழிலாளியும் நன்மை அடையமுடியும். இந்த இரு சாராரும் தமக்கெல்லாம் தொழில் தருநராக இறைவனைக் கண்டுகொள்ளாதவரை ஒருவரையொருவர் எற்றுக் கொள்வதும், தொழில் துறை அமைதி நிலவுவதும் கடினம்.

இன்றைய தினமானது நம்மை இறைவன் முன் நமது பணிகளை முன்னிட்டு இதய சுத்தியுடன் நம்மை மீளாய்வு செய்துகொள்ள எம்மை அழைக்கிறது. நமது பணியை நாம் நேர்மையுடனும், சலிப்பின்றியும். நம்மிடம் அண்டிவரும் பொது மக்களுக்கு எந்தவகை உபத்திரவங்களோ, அலைச்சலோ. மன உளைச்சலோ இன்றி பெற்றுக் கொள்கிறார்களா? நமக்கு தொழில் தருநராக இருக்கும் முதலாளி அது தனி மனிதனாக இருக்கட்டும், சில மனிதர்களாக இருக்கட்டும், ஏன் அரசாங்கமாகக் கூட இருக்கட்டும். நம்மிடம் எதிர்பார்க்கின்ற கடமையுணர்வை நாம் சரிவர நிறைவேற்றுகிறோமா? நாம் கை நீட்டிப் பெற்றுக் கொள்கின்ற நம் ஊதியத்திற்கு ஏற்றவர்களாக நாம் உண்மையில் பணி புரிகின்றோமா, அல்லது தெண்டைக்குத் தேவைக்கு என்கின்ற வகையில் நமது பணியில் ஈடுபடுகின்றோமா? இந்த தொழிலாளர் தினம் நம்மைச் சிந்திக்க அழைக்கிறது.



இறைவனின் முன்னிலையில் எல்லாமே நல்லவைதான். அவர் படைப்பெல்லாம் நன்றாக இருப்பதைக் கண்டு மகிழ்ந்தவர். அவர் உருவாக்கிய தொழில் துறைகளும் நல்லவையே. ஆனால் அது தொடர்ந்தும் நல்லதாக இருப்பதை உறுதி செய்ய வேண்டியவர்கள் தொழில் தருநர்களும், தொழில் பெறுநர்களும்தான். தூய வளனார் இறைமகனை வளர்த்தெடுக்கவேண்டிய பெரும் பொறுப்பையும், அவரைப் பாதுகாக்கும் சுமையையும் மரியாளுடன் பகிர்ந்துகொண்டவர். செய்யும் தொழில் எதுவோ அதைச் சிரத்தையுடன் தன்னை அண்டிவந்த வாடிக்கையாளர்களின் மனங் கோணாமல் தன் பணியைக் கச்சிதமாகச் செய்துவந்தவர். அந்தத் தொழிலில் ஏற்றத் தாழ்வு எதையும் அவர் கண்டுகொள்ளவில்லை. அதை விட மேலாகத் தன் மகனுக்கு – இறைமகன் இயேசுவுக்கும் அதைக் கற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து மக்கள் அபிமானம் வென்றவராக இருந்தார். அவரது மரணத்தின் பின்னரும் மக்கள் தம் தேவைகளுக்காக அவரைத் தேடிவந்தமை இதற்கொரு சாட்சி. அவரில்லாதபோதும் இறைமகன் இயேசு தன் வளர்ப்புத் தந்தையின் நற்பெயருக்குக் களங்கம் வராதபடி தொழிலைச் சிரமேற்கொண்டு முன்னெடுத்துச் சென்றார். அவர் தொழிலை மட்டுமல்ல தன் உருவாக்கங்களையும் நேசித்தார். இதனால் மக்கள் எதை எதிர்பார்த்து வந்தார்களோ அதைப் பொருத்தமான முறையில் சிறப்பாக எவ்வித குறைபாடுமின்றிச் செய்துதர அவரால் முடிகிறது. ஒவ்வொருவர் தேவையிலும் தன்னை முன் வைத்து தன் மன நிறைவுக்கு ஏற்பவே அவர் பணி புரிந்தார். இதனால்தான் பின்னாட்களில் அவரால் தன்னைப் பின்தொடர்ந்த மக்களுக்கு தன் நுகம் எளிது, தன் சுமை எளிது என்று சொல்லமுடிந்தது. அதாவது தன் பணியினால் தம்மிடம் வரும் மக்களின் சுமைகள் சுகமாக மாறிப்போகும், அந்தப் பிரச்சினை இனி இருக்காது என்று அவர் நமக்கு நமது தொழில் சுத்தம் எப்படியிருக்க வேண்டும் என்று காட்டித் தருகின்றார்.

## ஏமனில் முதியோர் இல்லத் தாக்குதல்

அருளாளர் அன்னை தெரேசாவின் "பிறரன்பு மறை பணியாளர் சபை" ஏமன் நாட்டில் நடத்திவரும் முதியோர் இல்லம் ஒன்றில் நடத்தப்பட்ட கடும் பயங்கரவாதத் தாக்குதலில் 4 அருட்சகோதரிகள் உட்பட 16 பேர் கொல்லப்பட்டனர். திருத்தந்தை பிரான்சிஸ் இதனைக் குறித்துத் தனது அதிர்ச்சியையும், ஆழ்ந்த வருத்தத்தையும், கடும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளார். இந்த இல்லத்தில் முதியோருடன் மாற்றுத் திறனாளிகளும் இருந்துள்ளனர். 2 பயங்கரவாதிகள் சுற்றி வளைக்க, 4 பயங்கரவாதிகள் துப்பாக்கியுடன் இல்லத்தினுள் நுழைந்து கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளனர். முதலில் இல்லத்தின் பாதுகாவலரைச் சுட்டுக் கொன்றுவிட்டு, முதியோரின் கைகளைக் கட்டி நிறுத்திச் சுட்டுக் கொடூரமாகக் கொலை செய்துள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். 4 அருட்சகோதரிகளுள் ஒருவரான அருட்சகோ. ஆன்செலம் இந்தியாவின் ஜார்க்கண்ட் மாநிலத்தின் கும்லா மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர். இருவர் ருவாண்டா நாட்டவர்கள். மற்றயவர் கென்யா நாட்டைச் சேர்ந்தவர்.



இன்றைய உலகில் நாம் தொழில் துறைகளை அந்தஸ்து உள்ளது. உயர்வானது, செல்வாக்கானது என்று பல மாதிரிகளாயும் பிரித்து வைத்துக் கொண்டு உயர் தொழில்களை நாடி, அதற்கும் முறையற்ற விதத்தில் செல்வாக்கினால் தட்டிப்பறித்து நமதாக்கிக் கொண்டு கையில் கிடைப்பதைக் கை நிறைய என்று ஏற்றுக் கொள்ளாமல். கையடக்கம் விட்டு, கை நீட்டிப் பிச்சை வாங்குவது போல் பாமரர்களிடமும், ஏனையவர்களிடமும் கையூட்டு அது இது என்று மேலதிகமாகச் சம்பாதித்து வாழ்ந்து, செய்யும் தொழிலுக்குக் களங்கம் செய்கின்றோம். இது இறைவனுக்கு ஒவ்வாத செயலாகும்.

நமது தொழில் தருவோரும் அது போலவே, தாம் இட்ட முதல், அதற்கான இலாபம் என்றில்லாமல் தம்மிடம் தொழில் புரிபவர்களது நலனிலும், முன்னேற்றத்திலும், வளமான வாழ்விலும் அக்கறை கொண்டவர்களாக நன்மைத்தனமுள்ள செயல்களில் ஈடுபடவும், உழைப்பிற்கேற்ற ஊதிபம் தரவும் முன்வரும்போது அங்கே தொழில் துறையில் சுமுகமான உறவும், அமைதியும் நிலவும். தொழிலாளியும் தன் முதலாளியின் நலனில் அக்கறை கொண்டவனாக சிரமத்துடன் உழைக்க முன்வருவான். கடவுளின் கீழ் அனைவரும் சமமே என்று எண்ணித் தானும் வாழ்ந்து மற்றவர்களை வாழச்செய்யும் போது நடப்பவை அனைத்தும் நலமாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய புல்லுமலை – புனித செபமாலை அன்னை ஆலயம்

## ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்

கிழக்கு மாவட்ட எல்லைக் கிராமம் பெரிய புல்லுமலை. இயற்கையழகு நிறைந்து மும்மொழிகளும், நான்கு மதங்களும் ஒன்றிணைந்து ஒற்றுமையின் சிகரத்தில் வாழ்ந்த மக்களைக் கொண்டது. மட்டக்க ளப்பின் ஆரம்பப் பங்குகளில் ஒன்று இது. 1895ம் ஆண்டிலே மட்டக்களப்பு வந்த இயேசு சபைத் துறவியான அருட்தந்தை: அல்போன்ஸ் மேரி எவ்றாட் அடிகள் 1897ல் மட்டக்களப்பு–பதுளை வீதியில் சிதறிக் கிடந்த கத்தோலிக்கர்க ளைத் தேடினார். மாட்டு வண்டியில் பயணித்து பெரிய புல்லுமலை யிலேயே தங் கிய இவர் பணியைப் பெற்றவர்களில் அதிகமானோர் இந்தியத் தமிழர் ஆவர். சில சிங்கள வரும் வேளாண்மை செய்து வாழ்ந்தனர். காலப்போக்கில் தமிழ், சிங்களம் இரு மொழிகளையும் பேசும் வல்லமையுள்ளவராய்ப் பணியை மேற் கொண்டார். ஆலயத்திற்கென 3 ஏக்கர் காணியைக் கொள்வனவு செய்து ஒரு பாடசாலையை அமைத்தார். அருகிலேயே ஒரு கல்வாரியை அமைத்து சிலையாக வடித்தார். சிறிது காலத்தில் புனித செபமாலை அன்னையின் பெயரில் ஒரு ஆலயமும் அமைத்தார். பலர் கத்தோலிக்கராயினர். வீதியமைப்பதிலும், வீதியைப் பராமரிப்பதிலும் ஈடுபட்டிருந்த தமிழ் மக்களிடையே இருந்த கத்தோலிக்கரை இனங்கண்டு விசுவாசத்தில் திடப்படுத்தியதுடன், சிலரை ஆலய வளவின் சுற்றுப் புறங்களில் நிரந்தரமாகவும் குடியேற்றினார். பின் அங்கு வாழ்ந்த வேடர் மத்தியிலும் ஒரு பாடசாலையையும் அமைத்தார். பிள்ளைகள் பாடசாலை வந்து கல்வியுடன் மறைக்கல்வியும் கற்றனர். ஆனால், அவர்களது குடி வழக்கப்படி இடம்பெயர்ந்து காட்டின் வேறொரு இடத்திற்குச் சென்றுவிட்டனர். இவ்வாறு 12 ஆண்டுகளாக அரும்பாடுபட்டுப் புல்லுமலையிலே ஒரு கத்தோலிக்க சமூகத்தை உருவாக்கிய பெருமை இவரையே சாரும். 1897 முதல் 1913 வரையிலான இவரது பணிக்காலத்திலேயே புல்லுமலை ஒரு புனித யாத்திரைத் தலமாகி விட்டது. 1904ல் முதலாவது பாத யாத்திரை ஆரம்பித்தது.




மட்டக்களப்பிற்கும் – பதுளைக்கும் இடையில் குருக்கள் தங்கிச் செல்ல புல்லுமலை உதவியது. அப்போதெல்லாம் மக்களுக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுப்பதுடன், ஆன்ம நலன்களையும் கவனிப்பர். 1913 முதல் 1916 வரை *Fr. Hemburger S.J,* அடிகளாரும், 1916 முதல் 1920 வரை *Fr. Hendry Bury S.J* அடிகளாரும், 1921 முதல் 1929 வரை *Fr. Vender Bush S.J* அடிகளாரும் பணியாற்றினர். பிற்காலத்தில் குருக்கள் பற்றாக்குறை காரணமாக 1925ல் தன்னாமுனைப் பங்குடன் பெரிய புல்லுமலை இணைக்கப்பட்டு பரிபாலிக்கப்பட்டது. 1965 வரை இந்நிலை நிலவியது என்றே சொல்லலாம். இடையில் 1930ல் *Fr. K. Aloysious Mary S.J* அடிகளாரும், 1956ல் *Fr.* அலெக்சான்டர் அடிகளும், 1958 முதல் 1963 வரை *Fr.* பிரான்சிஸ் செலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளும் பணியாற்றினார். ஆயர் அதிவந். இக்னேஷியஸ் கிளெனி ஆண்டகையின் காலத்தில் 1966-1973 வரை *Fr.* நோபட் ஒக்கஸ் அடிகள் பணிபுரிந்து, பட்டுப்பூச்சி வளர்ப்பு நிலையத்தை ஆரம்பித்து மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டார். இடையில் நின்றிருந்த பாத யாத்திரை மீண்டும் ஆரம்பமானது. பின்னர் அருட்தந்தை அங்கேயே தங்கிப் பணிபுரிந்தார். இவ்வேளை மறைமாவட்ட காணிப் பராமரிப்பாளர் அருட்தந்தை. அல்போன்ஸ் தியாகராஜா புல்லுமலையில் அருட்தந்தை. நோபட் ஒக்கஸ் அடிகளுடன் தங்கினார். 1973-1977 வரை அருட்தந்தை. *R* திருஞானதீபம் அடிகளும், 1977-1979 வரை அருட்தந்தை. *J.* அலெக்சான்டர் அடிகளும் பணிபுரிந்தனர். 1978 ல் புயலால் புல்லுமலையும் பாதிப்படைந்தது. பலரின் முயற்சியால் புனரமைப்பு நடைபெற்றது. 1979-1981 வரை ஆயித்தியமலைப் பங்குத் தந்தையாக இருந்த அருட்தந்தை. சாமிநாதன் அடிகள் ஆயர் அதிவந். அன்ரனி ஆண்டகையின் பணிப்புரையை ஏற்றுப் புல்லுமலையிலும் பணியாற்றினார். இதிலிருந்து ஆயித்தியமலையும், புல்லுமலையும் இணைத்துப் பரிபாலிக்கப்பட்டன. இவ்வேளை அருட்தந்தை *A.* தேவதாசன் உதவிப் பங்குத்தந்தையாகவும், போதகர் *S.* அன்ரனி மறையாசிரியராகவும் பணி புரிந்தனர். 1981-1984 வரை அருட்தந்தை. சாமிநாதன் அடிகளுக்குப் பின் அருட்தந்தை *A.* தேவதாசன் அடிகள் 1984-1988 வரையும், அருட்தந்தை. சாந்தன் இமானுவேல் அடிகள் 1988-1989 வரையும், 1988-1991 வரை அருட்தந்தை. யோசப் பொன்னையா அடிகள் (தற்போதைய மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்) பங்குத் தந்தையானார். 1990களில் ஏற்பட்ட இனக் கலவரங்களால் புல்லுமலை முற்றாகக் கைவிடப்பட்டது. 2003 வரை ஆயித்தியமலையில் புல்லுமலை மக்களுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. புல்லுமலை மக்கள் பல பக்கங்களுக்கும் சிதறியோடினர். இறுதியில் வந்து மயிலம்பாவெளியில் விபுலானந்தபுரத்தில் வாழ்ந்த இவர்களுக்கு ஒரு பாடசாலையும் அமைக்கப்பட்டது. இக்காலத்தில் 1991-1992 வரை அருட்தந்தை. *S.* இக்னேசியஸ் அடிகளும், 1992-1995 வரை அருட்தந்தை. நோயல் இமானுவல் (தற்போதைய திருமலை மறைமாவட்ட ஆயர்) அடிகளும், பின் 1995-1996 வரை மீண்டும் அருட்தந்தை. *S.* இக்னேஷியஸ் அடிகளும், 1996-2000 வரை அருட்தந்தை. *J.I.* சந்திரா அடிகளும், 2000ம் ஆண்டு முதல் அருட்தந்தை. *R.* திருச்செல்வம் அடிகளாரும் பணிபுரிந்தனர். படையினர் வசமிருந்த ஆலயம் திரும்பவும் பெறப்பட்டது. 2004ல் திருவிழாவும் கொண்டாடப்பட்டது. 2005-2008 வரை அருட்தந்தை. போல் ஜோனாத்தன் அடிகள் பணிபுரிந்தார். மீண்டும் யுத்தத்தினால் மக்கள் குடிபெயர ஆலயம் கைவிடப்பட்டது. 2010-2011 வரை அருட்தந்தை. அம்புறோஸ் அடிகளும், 2011-2012 வரை அருட்தந்தை. ரமேஷ் கிறிஸ்றி அடிகளும் பணிபுரிந்தனர். 2012 முதல் அருட்தந்தை. டக்ளஸ் ஜேம்ஸ் அடிகள் பொறுப்பேற்று 2012 வைகாசிமாதம் திருவிழாவின் போது 27 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் பாத யாத்திரை 18.05.2012ல் ஆரம்பமானது. துணை ஆயரான அதிவந். யோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் திருவிழாக் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. புல்லுமலையில் வசிக்கும் ஒரு சில குடும்பங்களும் இடம்பெயர்ந்து பல இடங்களிலும் வாழும் மக்களும் இணைந்து திருவிழாவை மாத்திரம் சிறப்பித்தனர். மக்கள் போகாத காரணத்தினால் ஆயித்தியமலைப் பங்குத்தந்தையின் பராமரிப்பில் விசேட திருப்பலிகள், திருவிழாக்கள் நடைபெற்றன. அருட்தந்தை. திசாநாயக்கா அடிகளும், அருட்தந்தை. அன்ரனி ஜெயராஜ் அடிகளும், அருட்சகோதரி மரிய புஸ்பகலா *A.C* அவர்களும் பணியாற்றினர்.

தற்போதைய நிலையில் அருட் தந்தை. *T.A.* ஜூலியன் அடிகள் தலைமையில் உதவிப் பங்குத்தந்தை. சுலக்சன் அடிகளும் இணைந்து ஆயித்தியமலையிலிருந்து தமது பணிகளைச் செய்கின்றனர். அத்துடன் 23.09.2012 முதல் எமது மறை மாவட்ட ஆயர் அதிவந். கலாநிதி. யோசப் பொன்னையா ஆண்டகையின் முயற்சியினால் பல மாற்றங்களையும் பெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 22.04.2016ல் புதிய ஆலயம் ஆயர் அவர்களினால் அபிஷேகம் செய்யப்பட்டது.

**"இன்று நடக்கப்போவதே தெரியாது நாளை நடக்கப்போவதை அறிந்தவன்போல பெருமையாகப் பேசாதே"**
(நீதிமொழி 27:1)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடவுளை நம்புவோரையும், நம்பாதோரையும் சிந்திக்க வைக்கும் ஒரு கற்பனை உரையாடல்

- மதிவதனா

ஆதாரம் : *DR. WAYNE DYER* -

ஒரு தாயின் கருவறையில் இரு குழந்தைகள், அதாவது, இரட்டையர். இவர்கள் தமக்கிடையே பேசிக்கொள்வதைப் போல இந்த உரையாடல் அமைந்துள்ளது.

**முதலாவது** : நீ எமது பிரசவத்துக்குப் பின் வாழ்வது பற்றி நம்புகிறாயா....?

**இரண்டாவது** : நிச்சயமாக, பிரசவத்துக்குப் பின் ஏதோ ஒன்று நிச்சயமாக உள்ளது. இங்கு நாம் பெறும் ஆயத்தம் ஏதோ ஒன்றுக்கு ஆயத்தப்படுத்துகிறது.

**முதலாவது** : அர்த்தமற்ற பேச்சு. பிரசவத்துக்குப் பிறகு எந்த மறுவாழ்வுமில்லை. அப்படியிருப்பின் அது எப்படிப்பட்டதாக இருக்கும்...?

**இரண்டாவது** : எனக்குத் தெரியாது. ஆனால், இங்குள்ளதை விட அதிக ஒளியாக இருக்குமெனத் தோன்றுகிறது.. சில நேரம் நாங்கள் எங்களுடைய கால்களால் நடக்கலாம், எமது வாயால் உண்ணலாம் என நினைக்கிறேன். சிலவேளைகளில் இப்போது தெரியாமலிருக்கும். உணர்வுகள்கூட அப்போது தெரியவருமென நினைக்கிறேன்.

**முதலாவது** : என்ன பைத்தியக்காரத்தனம். நடப்பதென்பதும், எமது வாயால் உண்பது என்பதும் முடியாத காரியம். தொப்புள்கொடி மட்டுந்தான் போஷாக்கையும் மற்றும் எமக்குத் தேவையான அனைத்தையும் தருகிறது. ஆனால், அது மிகவும் நீளங் குறைந்தது. பிரசவத்தின் பின் உள்ள வாழ்வு என்பது நடைமுறைக்கு சரிவராது.

**இரண்டாவது** : நல்லது. நான் நினைக்கிறேன் ஏதோ ஒன்று இங்குள்ளதைவிட வித்தியாசமாக வெளியில் இருக்கும் என்று. சிலவேளை இந்தக் கொடி எமக்குத் தேவையும்படாது.

**முதலாவது** : முட்டாள். இதைத் தவிர வெளியில் மறுவாழ்வு இருக்கிறதென்றால், ஏன் ஒருவரும் அங்கிருந்து இங்கு வரவில்லை. பிரசவந்தான் வாழ்வின் இறுதி. அத்துடன் பிரசவத்துக்குப் பிறகு ஒன்றுமேயில்லை. ஆனால், இருளும், மௌனமும், மறந்த நிலையுந்தான் இருக்கும். அது எங்குமே எங்களைக் கொண்டு செல்லாது.

**இரண்டாவது** : அதெல்லாம் எனக்குத் தெரியாது. நிச்சயமாக நாங்கள் நிச்சயமாக நாங்கள் எங்கள் அம்மாவைச் சந்திப்போம். அவள் எங்களைக் கவனித்துக்கொள்வாள்.

**முதலாவது** : அம்மாவா? நீ உண்மையாக அம்மாவை நம்புகிறாயா? சிரிப்புத்தான் வருகிறது. அம்மா என்ற ஒரு ஆள் இருந்தால் இப்பொது அவள் எங்கே?

**இரண்டாவது** : அவள் எம்மைச் சுற்றியிருக்கிறாள். நாங்களும் அவளால் சூழப்பட்டு இருக்கிறோம். நாங்கள் அவளுக்குச் சொந்தம். அவளுக்குள்தான் நாங்கள் வாழ்கிறோம். அவள் இல்லாமல் இந்த உலகம் இருக்கவும் முடியாது.

**முதலாவது** : நல்லது. ஆனால், நான் அவளைப் பார்க்கவில்லை. அதனால் அவள் இல்லை என்பதுதான் உண்மை.

**இரண்டாவது** : சில வேளைகளில் நீ அமைதியாக இருக்கையில் உன்னிப்பாகக் கவனிக்கும்போதும், கேட்கும்போதும் அவளைப் பற்றி, அவள் இருக்கிறதைப் பற்றி உன்னால் உணர முடியும். அத்துடன் உன்னால் அவளுடைய அன்பான குரலையும் கேட்க முடியும். மேலிருந்து அவள் அழைப்பதைக் கீழேயிருந்து நாம் கேட்கமுடியும்.

**(சிலவேளை இந்த உரையாடல் கடவுள் உள்ளார் என்பதற்கான மிகச் சிறந்த விளக்கமாக அமையலாம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுப் போட்டி
சிறுவர்களுக்கு மட்டும்



முடிவுத் திகதி 31.05.2016

# திருவிவிலியம் கற்போம் — 155

## நீதித் தலைவர்கள் – 15:03 – 16:02

**(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

1. சிம்சோன் முந்நூறு நரிகளைப் பிடித்து, வாலோடு வால் சேர்த்து, இருவால்களிடையே ஒரு ......................... வைத்துத் தீ மூட்டிப் பெலிஸ்தியரின் முற்றிய பயிர்களிடையே அனுப்ப அவை தானியங்களையும், பயிர்களையும் தோட்டங்களையும் எரித்தன.

   அ) தீப்பந்தத்தை ஆ) தடியை இ) கத்தியை

2. பெலிஸ்தியர் "இதைச் செய்தது யார்?" எனக் கேட்டபோது "திம்னாவின் மருமகன் சிம்சோன். ஏனெனில், திம்னா அவர் மனைவியை, அவர் தோழனுக்குக் கொடுத்துவிட்டான்" என்று சொல்ல, அவர்கள் அவளையும் தந்தையையும் .........................

   அ) துரத்தினர் ஆ) எரித்தனர் இ) அடித்தனர்

3. சிம்சோன் "நீங்கள் இப்படிச் செய்ததற்குப் பழி வாங்காமல் ஓய மாட்டேன்" என்று சொல்லி, அவர்களைக் கடுமையாகத் தாக்கி, அவர்களுள் பலரை வெட்டி வீழ்த்திவிட்டுப் புறப்பட்டு .........................பாறைப் பிளவில் தங்கினார்.

   அ) திம்னாவின் ஆ) பெலிஸ்தியரின் இ) ஏற்றாமின்

4. பெலிஸ்தியர் யூதாவில் பாளையமிறங்கி ......................... தாக்க, யூதா மக்கள், "ஏன் எமக்கு எதிராக வந்துள்ளீர்கள்" எனக் கேட்க, "சிம்சோனைப் பிடித்து அவன் எமக்குச் செய்ததுபோல நாமும் அவனுக்குச் செய்ய வந்தள்ளோம்" என்றனர்.

   அ) பெலிஸ்தியரை ஆ) இலேகியை இ) சிம்சோனை

5. ......................... இருந்து மூவாயிரம் பேர் சிம்சோனிடம் சென்று "பெலிஸ்தியருக்குக் கீழ் நாம் இருக்கிறோம். ஏன் இவ்வாறு செய்தாய்" எனக் கேட்க, அவர் "அவர்கள் எனக்குச் செய்தது போல், நானும் செய்தேன்" என்றார்.

   அ) யூதாவில் ஆ) இலேகியில் இ) ஏற்றாமினில்

6. அவர்கள் அவரிடம் "உன்னைக் கட்டிப் பெலிஸ்தியர் கையில் ஒப்படைக்க வந்துள்ளோம்" என்றதற்கு அவர், "என்னை ......................... மாட்டீர்கள் என்று எனக்கு உறுதி கூறுங்கள்" எனக் கேட்க அவர்கள் அவ்வாறே செய்து இரு புதிய கயிறுகளால் கட்டிக் கூட்டிச் சென்றனர்.

   அ) தாக்க ஆ) அடிக்க இ) கொல்ல

7. இலேகியை நெருங்குகையில் பெலிஸ்தியர் கூச்சலிட்டு வந்தபோது, அவர்மீது ஆவி இறங்க, கையிலிருந்த கயிறுகள் தளர்ந்து வீழ்ந்தன. ......................... பச்சை தாடை எலும்பை எடுத்து ஆயிரம் பேரைக் கொன்று அவ்விடத்தை "இராமேத்து இலேகி" என அழைத்தார்.

   அ) சிங்கத்தின் ஆ) கழுதையின் இ) யானையின்

8. சிம்சோன் தாகமுற்று ஆண்டவரிடம் "நீர் உம் ஊழியன்மூலம் இம்மாபெரும் விடுதலையைத் தந்தீர் இப்போது நான் தாகத்தால் செத்து விருத்தசேதனம் செய்யப்படாதவரின் ......................... வீழ்வேனோ" என மன்றாட கடவுள் நிலப்பிளவைத் தோற்றுவிக்க நீர் வந்தது.

   அ) காலில் ஆ) சூழ்ச்சியில் இ) கையில்

9. சிம்சோன் அதைக் குடித்ததும் புத்துயிர் பெற்று அவ்விடத்தை 'ஏன்ககோரே" என அழைத்தார். அது இன்றுவரை இலேகியில் உள்ளது. ......................... காலத்தில் அவர் இருபது ஆண்டுகள் இஸ்ரயேலில் நீதித் தலைவராக விளங்கினார்.

   அ) யூதர்களின் ஆ) இலேகியரின் இ) பெலிஸ்தியரின்

10. சிம்சோன் காசாவில் ஒரு விலைமாதைக் கண்டு அவளிடம் சென்றபோது, "சிம்சோன் வந்துள்ளார்" எனக் காசா மக்களுக்குக் கூறப்பட்டதால், அவர்கள் ......................... முழுவதும் அவருக்காகக் காத்திருந்து "பொழுது புலர்ந்ததும் கொல்வோம்" என்றனர்.

    அ) இரவு ஆ) நாள் இ) நடுச்சாமம்

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் - 155

பரிசுப் போட்டி




(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

1. முச்சங்கம் எனப்படும் முதற்சங்க, இடைச் சங்க, கடைச்சங்க கால அளவு முறையே :
   *(4440, 3700, 1850 - 3440, 2750, 1800 - 4040, 3600, 1850)*

2. கல்கூர்லி, கூல்கார்டி ஆகிய அவுஸ்திரேலியப் பகுதிகளில் இருந்து பெறப்படும் கனிப் பொருள்:
   (தங்கம் - வெள்ளி - இரும்பு)

3. மகாகவி பாரதியின் வாழ்வில் 'பெண்' பற்றிய விழிப்புணர்வு வர உந்துசக்தியானவர்:
   (செல்லம்மா - நிவேதிதை எலிசபெத்)

4. "மறையைப் பிரச்சாரப்படுத்தும் அடித்தளம் பள்ளிக்கூடமாகும்" எனும் கொள்கை கொண்டு இலங்கையை ஆண்டவர்கள் :
   (போர்த்துக்கேயர் - ஆங்கிலேயர் - ஒல்லாந்தர்)

5. 'தன் குற்றம் இருக்கப் பிறர் குற்றம் ..............................'
   (பாராதே - பார்ப்பதா - பார்க்காதே)

6. அவன் நல்லன் என்பது :
   (குறிப்புவினை - தெரிநிலைவினைமுற்று - குறிப்புவினைமுற்று)

பெயர் : ..............................................................................

முகவரி: ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 154
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போட்டி முடிவுகள்...

## திருவிவிலியம் கற்போம் - 153 விடைகள்

குழந்தைக்கு, மனிதர், மதுபானம், எரிபலியை, வியப்பான, தீப்பிழம்பு, கடவுளை, சோராவுக்கும், மணமுடித்து, ஆண்டவர்

## அறிவை வளர்ப்போம் - 153 விடைகள்

1. சைமன் டீ மாண்ட் ஃபோர்ட் 2. லோயஸ் 3. வாழைப்பூ
4. ஸ்பில் பர்ஜன் 5. கொண்டாடும் 6. வாயில்

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுபவர்கள்**

- அ. யோவேல்,
  6/2, அரசாங்க வீதி ஒழுங்கை,
  கல்லடி, மட்டக்களப்பு.
- பி. ஆன் லிடியா,
  6A, ஆலய வீதி,
  சொறிக்கல்முனை.
- சுரேஷ் மொறின் ஜெலோஷன்,
  6/52, சொறிக்கல்முனை - 03,
  சம்மாந்துறை.
- ஏ. லிவின்சியா,
  90/83, பாலமுருகன் கோவில் வீதி,
  இருதயபுரம்,
  மட்டக்களப்பு..

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 105 முடிவுகள்

- **முதலாம் பரிசு - 400/=**
  S. தில்ஷான்,
  1A/1, கிட்டங்கி வீதி,
  மணல்சேனை,
  கல்முனை.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  S. தேவதர்ஷனா,
  இல.16, பிரதான வீதி,
  பெரிய கல்லாறு- 2,
  கல்லாறு.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  L. லபிஷா,
  கிறிஸ்ரி இல்லம்,
  தம்பிலுவில் - 01.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org